# CIVICS

# தேச பரிபாலனம்

(இரண்டாம் புத்தகம்)

பூ. மு. முருகேச முதலியார்
எழுதியது

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE
(*Vide Gazette Part I-B, dated 16-11-'26, Page 512*)

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1930

ஜிஸ்தர் செய்தது] [விலை 5 அணா

# பொருள் அட்டக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | நமது கடமைகள் | 1 |
| 2. | ஆங்கில அரசியல் | 4 |
| 3. | இந்திய சிற்றரசர் | 12 |
| 4. | மாகாண அரசாட்சி | 17 |
| 5. | கிராமம் | 21 |
| 6. | குற்ற விசாரணை | 24 |
| 7. | ஸிவில் அதிகாரம் | 27 |
| 8. | லோகல் போர்டு | 33 |
| 9. | வோட்டு செய்யும் முறை | 39 |
| 10. | ரெவினியூ இலாகா | 44 |
| 11. | உப்பு இலாகாவும், கலால் இலாகாவும் | 48 |
| 12. | காட்டு இலாகா | 50 |
| 13. | மராமத்து இலாகா | 54 |
| 14. | ரெயில்வே இலாகா | 58 |
| 15. | வைத்தியமும்-ஆரோக்கிய விசாரணையும் | 61 |
| 16. | இராணுவ இலாகா | 65 |
| 17. | கடற் படை | 70 |
| 18. | போலீஸ் இலாகா | 73 |
| 19. | சிறைச்சாலைகள் | 76 |
| 20. | கல்வி இலாகா | 80 |
| 21. | தபாலும் தந்தியும் | 85 |
| 22. | பத்திரப்பதிவு இலாகா | 90 |
| 23. | நாணயங்களும் நோட்டுகளும் | 91 |
| 24. | விவசாயம் | 94 |
| 25. | சாரணச் சிறுவர் இயக்கம் | 97 |
| 26. | ஆங்கில அரசாட்சியின் நன்மைகள் | 99 |
| 27. | ஆங்கில ஐக்கியக் கொடி | 103 |



நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி

# முகவுரை

ராஜாங்க விஷயமாகப் பற்பல உரிமைகளைப் பெறவும் அவற்றின் மூலமாக நாகரிக விருத்தியை அடையவும் இக்காலத்தேசமாந்தர் பெரிதும் அவாவு கின்றனர். அத்தகைய நோக்கம் முற்றுப்பெறு தற்கு அடிப்படையான செய்திகளைப் பாடசாலைச் சிறுவர்கள் அறிந்துகொள்வது அவசியமன்றோ. இவ் வுண்மையை உணர்ந்து பூ. மு. முருகேச முதலியார் எழுதிவரும் இச் சிறு நூல்கள் ஆரம்ப பாடசாலைகளுக்கு மிகவும் அனுகூலமானவைக ளாகும். அரிய செய்திகளைச் சிறுவர்க்குச் சிறிது சிறிதாகப் போதிப்பது சிறந்த முறையாம்.

மேரி யரசி கலாசாலை,
சென்னை, 7-7 '26

கா. நமச்சிவாயன்.

# தேச பரிபாலனம்

## 1. நமது கடமைகள்

நமது சென்னை மாகாணத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலை மாணுக்கர்களுக்கும், போதனுமுறைப் பாடசாலை உபாத்தியாயர்களுக்கும் ஸிவிக்ஸ் என்னும் விஷயம் ஒரு பாடமாக ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. ஆகையால், மாணுக்கர் உபாத்தியாயர் என்னும் இருதிறத்தவரும் அவ் விஷயத்தைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

முதலில், ஸிவிக்ஸ் என்னும் சொல்லின் பொருள் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த வார்த்தை ஸிவிஸ் என்னும் வார்த்தையி லிருந்து உற்பத்தியாயிற்று. அது லத்தீன்பாஷையிலுள்ள வார்த்தை. அதற்கு நகரவாசி அல்லது நகரத்தான் என்று பொருள்; நகரம் என்றும் அர்த்தம் உண்டு. ஆகவே, ஒரு நகரம் எப்படி இருக்கவேண்டும்,

நகரவாசி எப்படி நடந்து கொள்ளவேண்டும். அப்படி நடந்து கொள்வதற்குத் துரைத்தனத்தார் செய்திருக்கும் அனுகூலங்கள் என்ன, அந்தமுறைப்படி நடந்துகொள்வதனுல் தனக்கும் பிறருக்கும் துரைத்தனத்தாருக்கும் விளையத்தக்க நன்மைகள் யாவை—என்பனமுதலிய விஷயங்களை விவரிக்கும் நூல் **தேசபரிபாலன நூல்** (ஸிவிக்ஸ்) எனப்படும். எனவே, ஒரு தேசத்துக் குடிகளும் துரைத்தனத்தாரும் ஒற்றுமைப்பட்டு, இருதிறத்தாருடைய நன்மையையும் கருதி, உலக விவகாரங்களை நடத்துவதற்குச் செய்துகொண்டு இருக்கும் ஏற்பாடுகளை விவரிப்பதே தேச பரிபாலன முறையாகும்.

நாம் வாசஞ் செய்யும் வீட்டை அல்லது கிராமத்தைப் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். ஸ்நானத்திற்கும் பானத்திற்கும் வேண்டிய சுத்த ஜலம் எல்லாருக்குங் கிடைக்கும்படி செய்தல் அவசியம். பலவிதமான வியாதிகளும் கொள்ளை நோய்களும் ஜனங்களை உபத்திரவஞ் செய்யாது தடுக்கவேண்டும். ஜனங்கள் தாராளமாய்ப் போக்குவரவு செய்வதற்கு ஏற்ற சாலைகளையும் தெருக்களையும் அமைக்க வேண்டும். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிடாது சந்தோஷமாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்கேற்ற சட்ட திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இவற்றிற்கு வேண்டிய பொருளைச்

சேகரிப்பதற்கு வரிகளை ஏற்படுத்தவேண்டும். இவை யன்றி, ஜனங்கள் கேவலம் மிருகங்களைப்போல் பகுத்தறிவின்றி, துன்மார்க்கராக நடவாது காக்கவேண்டும். ஆகையால், கல்வியைப் பரவச்செய்து ஜனங்கள் உத்தமராயும் நீதிமான்களாயும் வாழும்படி செய்வது அவசியம். அவர்கள், பொதுஜன நலத்தின்பொருட்டு ஏற்படுத்தப்பட் டிருக்கும் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்யவேண்டும்.

துரைத்தனத்தார் ஜனங்களுக்குச் செய்யும் நன்மைகள் சில உண்டு. ஜனங்கள் இராஜாங்கத்தாருக்குச் செய்யவேண்டிய கடமைகள் சில உண்டு. 'துரைத்தனம் குடித்தனமே' என்பது பழமொழி. அதாவது, இராஜாங்கமானது ஒரு குடும்பத்தைப்போல் இருக்கின்றதுஎன்பதாம். ஒரு குடும்பத்திற் புருஷன், மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார் முதலிய பலர் சேர்ந்து வசிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், ஒன்றுசேர்ந்தும், செய்யவேண்டிய பல கடமைகள் உண்டு. வெளியே போய்க் குடும்ப சம்ரக்ஷணைக்கு வேண்டிய பொருள்களைச் சம்பாதிப்பதும், குடும்ப காரியங்களை மேற்பார்வை பார்ப்பதும் குடும்பத்துத் தலைவனுடைய கடமை. தலைவன் தேடித் தருகிற பொருளைக் கொண்டு குடும்பத்தவரைப் போஷிப்பதும், விருந்தாளிகளை உபசரிப்ப

தும் மனைவியினுடைய கடமை. இதுபோலவே, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் கடமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அக் கடமைகள் எவை என்றறிந்து சரியான காலத்தில் அவற்றைச் செய்தால் குடும்பம் க்ஷேமமடையும். ஆகையால், குடும்பத்தலைவன் செய்ய வேண்டிய சில கடமைகள் உண்டு என்பதும், அவன் அக்கடமைகளை நிறைவேற்றுவதற்குக் குடும்பத்தவர்கள் உதவி செய்யவேண்டும் என்பதும் நமக்குத் தெரிகிறது.

இது போலவே இராஜாங்கமும் இருக்கிறது. அரசன் கடவுளுடைய பிரதிநிதி என்பதை நாம் ஞாபகத்தில் வைத்து ராஜகட்டளைகளுக்கு அடங்கி நடக்கவேண்டும்.

## 2. ஆங்கில அரசியல்

ஒரு குடும்பத்திற்கு ஒரு தலைவன் அவசியமென்றும், அவன் அக் குடும்பத்தைப் பாதுகாக்கிறானென்றும் நாம் முன்னே சொன்னோமல்லவா ? அதுபோலவே ஜனங்கள் வாசஞ் செய்யும் நாடுகளையும் தேசங்களையும் பாதுகாப்பதற்கு ஒரு தலைவன் வேண்டும். அத் தலைவன்தான் அரசன். அவனுக்கு ஜனங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை ஏற்பட்டிருக்

கிறது. அவன் அவர்களுடைய விவாதங்களைத் தீர்க்க வேண்டும்; குற்றம் செய்கிறவர்களைத் தண்டிக்க வேண்டும்; ஜனங்கள் சந்தோஷமாக வாழ்வதற்கு அனுகூலமானவற்றைச் செய்ய வேண்டும். அவை யனைத்தையும் அரசனே நேரில் கவனிப்பது அசாத்தியம். ஆகையால், இக்கடமைகளைப்பலபிரிவுகளாகப் பிரித்துப் பற்பல அதிகாரிகளால் நிறைவேற்றி வருகின்றனர். இப்படி அரசனும், அவனுடைய அதிகாரம் பெற்ற அதிகாரிகளும் இக் கடமைகளை நிறைவேற்றும் முறைக்கு இராஜாங்கம் அல்லது துரைத்தனம் என்று பெயர்.

ஆசியா கண்டத்தில், நீர்வளம், நிலவளம் முதலிய பல வளங்களால் சிறந்த பெரியதேசம் நமது இந்தியா தேசம். இதில் பலகோடி ஜனங்கள் வசிக்கிறார்கள். இதில் வசிக்கும் இந்தியராகிய நம்மை ஆங்கிலேயர் ஆண்டு வருகிறார்கள். ஆசியாவுக்கு வடமேற்கில் வெகுதூரத்தில் இங்கிலாந்து என்று ஒரு தீவு இருக்கிறது. அத் தீவில் வசிப்பவர்களே ஆங்கிலேயர். அவர்களை இங்கிலீஷ்காரர் என்றும், வெள்ளைக்காரர் என்றும்சொல்வதுண்டு. அவர்கள் கல்வி, செல்வம், நாகரிகம். சேனுபலம், தைரியம்முதலியவற்றில் சிறந்தவர்கள். அவர்களுடைய ஆட்சியினுல், நமது தேசத்தில் பல விதமான நன்மைகள் உண்டாயிருக்கின்றன.



பார்லிமென்ட் மஹாசபை

இப்பொழுது இங்கிலாந்தில் அரசராக இருப்பவர் மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் அரசர். இந்தியாவுக்கும் அவரே சக்கரவர்த்தியாக இருக்கிறார். இங்கிலாந்தில் அவருக்கு ஆலோசனை சொல்ல ஒரு பெரிய சபை ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. அதற்குப் **பார்லிமேண்ட்** (Parliament) என்று பெயர். அந்தச் சபை, பிரபுக்கள் சபை (ஹௌஸ் ஆவ் லார்ட்ஸ்)



ஹௌஸ் ஆவ் லார்ட்ஸ்

என்றும், ஜனப் பிரதிநிதி சபை (**ஹௌஸ் ஆவ் காமன்ஸ்**) என்றும் இரண்டு பிரிவினையுடையது. பிரபுக்கள் சபையில் பிரபுப் பட்டம் பெற்றவர்களும், அவர்கள் சந்ததியாரும்

இருப்பார்கள். இவர்களுள் பலர் இந்தியாவில் வைஸ்ராயாகவும், கவர்னராகவும், இதர ஆங்கில தேசங்களில் இராஜப் பிரதிநிதிகளாகவும் இருந்து அநுபவம் பெற்றவர்களாயும் இருப்



ஹௌஸ் ஆவ் காமன்ஸ்

பார்கள். ஜனப் பிரதிநிதி சபையில் ஆங்கிலேயர்களின் பொதுஜனப் பிரதிநிதிகளாகத் தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் இருப்பார்கள்.

இந்த மகா சபை யன்றி, கல்வியிலும் இராஜாங்க முறையிலும் நன்ருய்த் தேர்ந்தமந்திரிமார் அடங்கிய சிறிய சபை யொன்று ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. அதற்கு மந்திராலோசனைச் சபை அல்லது **காபினெட்** என்று

பெயர். அவர்களுள் தலைமை வாய்ந்தவர் பிர தமமந்திரி (பிரைம் மினிஸ்டர்). காபிநெட்டின் மெம்பர்கள ஒவ்வொருவருக்கும் ஸெக்ரிடரி அல்லது காரியதரிசி என்று பெயர். இவர்கள் உள்நாடு, அயல்நாடு, இந்தியா, பொக்கிஷம் முதலிய விஷயங்களைத் தனித்தனியாகக் கவ



ஒயிட் ஹால்

ணிப்பார்கள். ஆனால், இவர்கள் எல்லாரும் பார்லிமெண்டு மகா சபைக்கு உட்பட்டவர்களே. இந்தியாவின் சம்பந்தமான விஷயங்களைக்கவ னிக்கிற காரியதரிசிக்குத் தனி ஆபீஸ் உண்டு அதற்கு 'இந்தியா ஆபீஸ்' (ஒயிட் ஹால்)

என்று பெயர். இந்திய காரியதரிசிக்கு உதவி யாக 12 அங்கத்தினர்கள் உண்டு. அச் சபை யில் இப்போது மூன்று இந்தியர்கள் அங்கத் தினர்களாக நியமனம்பெற்றிருக்கிருர்கள். இந் திய காரியதரிசியின் ஆலோசனையின் பேரில் தான் நமது சக்கரவர்த்தியார் கவர்னர்களையும், ஹைகோர்ட் ஜட்ஜு முதலிய பெரிய உத்தி யோகஸ்தர்களையும் நியமிக்கின்ருர்.



இர்வின் பிரபு

ஜார்ஜ் அரசருடைய அதிகாரம் பெற்று ஓர் ஆங்கிலப் பிரபு அவருடைய பிரதிநிதி யாக நமது தேசத்தை ஆண்டு வருகிருர். இவருக்கு வைஸ்ராய் அல்லது ராஜப் பிரதி நிதி என்று பெயர். இப்போதுள்ள வைஸ்

ராய் இர்வின் பிரபு. இவருக்குத் துணை செய்ய மூன்று சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கு எக்ஸிகியுடிவ் கவுன்ஸில் அல்லது காரிய நிர்வாக சபை என்றும், மற்றதற்கு லெஜிஸ்லேட்டிவ் அஸெம்பிளி அல்லது இந்திய சட்ட சபை என்றும், மூன்ருவதற்குக் கௌன்ஸில் ஆவ் ஸ்டேட் அல்லது ராஜாங்க மகா சபை என்றும் பெயர்.

காரிய நிர்வாக சபைக்கு அங்கத்தவர்கள் இத்தனை பேரென்று நிர்ணயம் கிடையாது. மூன்றுபேர் இந்தியரும் மற்றவர்கள் ஆங்கிலேயருமாக இருத்தல்வேண்டும். அங்கத்தவரின் பாதிக்கு மேற்பட்டவர்களுடைய அபிப்பிராயப்படியே விஷயங்கள் தீர்மானிக்கப்படும். இவ் விவகாரசபையார் கவனிக்கவேண்டிய விஷயங்களை ஒன்பது பிரிவாக்கி, ஒவ்வொரு பிரிவை ஒவ்வொருவர் நிர்வகிப்பர். ராஜப் பிரதிநிதியே இச் சபைக்குத் தலைவர். இச் சபை சாதாரணமாய் வாரத்திற்கு ஒரு முறை கூடும்.

இந்திய சட்ட சபையில் 140 அங்கத்தவர்கள் உண்டு. அவர்களில் அநேகர் பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். அவர்கள் மூன்று வருஷகாலம் அங்கத்தவராக இருக்கலாம். அங்கத்தவர்கள் தங்களுக்குள் ஒருவரைச் சபாநாயகராகத்தேர்ந்தெடுப்பார்கள். அவருக்கு

மாத்திரம் சம்பளம் உண்டு. நமது பெரிய தேசத்தை ஆள்வதற்கு வேண்டிய சட்டங்களை ஏற்படுத்தவும், ராஜ்ய விவகாரங்களை விசாரிக்கவும் இவர்களுக்கு அதிகாரம் உண்டு. வருஷாந்தர வரவு செலவுக் கணக்குகளைப் பரிசோதனை செய்வதும் இவர்களுடைய காரியமாம்.

ராஜாங்க மகா சபையில் 60 அங்கத்தினர்கள் உண்டு. இவர்களில் 20 பேர் ராஜப் பிரதிநிதியினால் நியமிக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேற் சொல்லிய இந்திய சட்ட சபையின் தீர்மானங்களைப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்தவும் மாற்றவும் ராஜாங்க மகா சபைக்கு அதிகாரம் உண்டு.

## 3. இந்திய சிற்றரசர்

இங்கிலாந்தின் அரசரே இந்தியாவுக்குச் சக்கரவர்த்தி என்று சொன்னோம். இந்தியாவின் பெரும்பாகம் இவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருக்கின்றது; மற்றப் பாகத்தில் பல சிற்றரசர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாரும் இந்தியர்கள். ஆங்கிலேயர் இந் நாட்டுக்கு வருமுன்னே இந்தியாவானது பற்பல சிறு சிறு ராஜ்யங்களாகப் பிரிவுபட்டிருந்தது. ஒவ்வோர்

இராஜ்யத்திற்கும் தனித் தனியே ஒவ்வோர் அரசர் இருந்தார். அவைகளுள் சரியாக ஆளப்படாத இராஜ்யங்களை ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டு, சிலவற்றை அந்தந்த இராஜ பரம்பரையினர் கையிலேயே விட்டிருக் கிறார்கள். இப்படித் தம் நாடுகளைத் தாமே ஆண்டு வருகிறவர்களும் ஆங்கிலேயருடைய துணையினாலேயே நிலை நிற்கிறார்கள். ஆதலால் இவர்களுக்குச் சிற்றரசர்கள் என்றுபெயர். இந்தியாவின் பெரும் பாகத்திற்கு அரசராகப் பல நாட்டு அதிபதிகளிடம் இறை வாங்கு கிறவராக இருப்பதனாலே ஜார்ஜ் மன்னரை இந்திய சக்கரவர்த்தி என்று சொல்கிறோம்.

சக்கரவர்த்தினி என்னும் பட்டத்தை 1858-ஆம் ஆண்டில் விக்டோரியா மகா ராணியார் மேற்கொண்டார். அத் தருணத்தில் அம் மகாராணியார் இந்தியர்களின் மீது கருணை கூர்ந்து இவர்கள் தங்கள் மனம் போல எம் மதத்தையும் அநுசரிக்கலாம்; அவரவருடைய கல்விக்கும், அறிவுக்கும், திறமைக்கும் தக்க வாறு அவரவர் துரைத்தன அதிகாரங்களில் உயர் பதவி பெறுவதற்கு உரியவராவர்; இவ் விஷயத்தில் சாதி குலம் நிறம் முதலிய வேற்று மைகள் இல்லை. இந்திய சிற்றரசர்கள் தம்வசத் துள்ள நாடுகளையும் உரிமைகளையும் முன்போல்வே அநுபவித்துக் கொள்ளலாம் என்பன



இந்திய சிற்றரசர்

முதலியவைகளைப் பிரகடனம் செய்தனர். இந்த அபய மொழியை அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த எட்வர்ட் மன்னரும், ஜார்ஜ் மன்னரும் முறையே ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

நமது தேசத்தில் சிற்றரசருடைய அரசாட்சிக்கு உட்பட்ட நாடுகளின் விஸ்தீரணம் ஏறக்குறைய ஏழு இலக்ஷம் சதுர மைல் என்றும், அவற்றின் ஜனத் தொகை சுமார் எட்டுக் கோடியென்றும் தெரிகிறது. ஹைதராபாத்து, பரோடா, மைசூர், இந்தூர், காஷ்மீர் முதலியவை இந்திய அரசர்களால் ஆளப்பட்டு வரும் இராஜ்யங்களில் முக்கியமானவையாம். புதுக்கோட்டை, கொச்சி, திருவாங்கூர் முதலியவை சிறிய சுதேச இராஜ்யங்கள். இவ்விதமாகச் சிறிதும், பெரிதுமான இந்திய இராஜ்யங்கள் நமது தேசத்தில் சுமார் 675 வரையில் உண்டு. அவற்றில் அதிக விஸ்தாரமானவைகளில் ஆங்கிலேயர் தம் உத்தியோகஸ்தர் ஒருவரை வைத்திருக்கிறார்கள். இவருக்கு ரெஸிடெண்டு அல்லது ஸ்தானுதிபதி என்றுபெயர். இவர் தாம் இருக்கும் இந்திய இராஜ்யத்தின் அதிபதிக்கு (சிற்றரசர்க்கு) விவகார விஷயங்களில் உற்ற ஆலோசனை சொல்லத்தக்கவராவர். சிறிய இராஜ்யங்களில் ஆங்கிலத்தவர் அரசியற் காரியஸ்தர் (பொலிடிகல் ஏஜெண்ட்) ஒருவரை வைத்திருக்கிறார்கள். பின்னும் சிறிய சம்ஸ்தானங்களி லுள்ள சிற்றரசர்களுக்கு ஜில்லா கலெக்டரே ஆலோசனைத் துணைவராவர்.

பிரிடிஷ் இராஜாங்கத்தார் இந்தியாவில் எப்படி ஆட்சி செலுத்துகிறார்களோ, அப்ப

டியே இந்திய அரசர்கள் திவான் என்னும் மந்திரியின் உதவியைக் கொண்டு கிரமமாகத் தங்கள் நாடுகளை ஆண்டு வருகின்றனர். இராஜ்ய தந்திர நிபுணர்களான இந்தியர் பலர் இந்திய அரசர்களுடைய இராஜ்யங்களில் திவான்களாக அமர்ந்து அவற்றைச் சீர்படுத்தி யிருக்கின்றனர்.

இந்திய அரசர்களுடைய இராஜ்யங்களைப் பகைவர் தாக்காம லிருக்கவும், இவ்வரசர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிடாம லிருக்கவும் ஆங்கில துரைத்தனத்தார் பாதுகாத்து வருகின்றனர். இவ்விதத் துணைக்காக இந்திய அரசர்கள் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி பிரிடிஷ் இராஜாங்கத்தவருக்குக் கப்பங்கட்டி வருகிறார்கள். அதுவன்றி ஆங்கிலேயரைப் பகைவர் தாக்கினால் இந்திய சிற்றரசர் அவர்களுக்கு உதவி செய்யவும் உடன்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஆங்கிலேயரைத் தவிர வேறு யாரோடும் உடன்படிக்கையாவது சிநேகமாவது செய்துகொள்ளக் கூடாது. வெவ்வேறு பழக்க வழக்கங்களையுடைய பற்பல சிற்றரசர் இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து அரசு செலுத்துவது இத் தேசத்தின் அமைதிக்கும், பலத்திற்கும் காரணமா யிருக்கிறது. ஆங்கில அரசின் பலத்துக்கும் இவர்கள் காரணராயிருக்கிறார்கள்.

## 4. மாகாண அரசாட்சி

இராஜப் பிரதிநிதி இந்தியா முழுமைக்கும் மேல் அதிகாரியாக இருந்து நமது அரசருக்குப் பதிலாக ஆண்டுவருகிறார் என்று முன்னே சொன்னோம். ஆயினும், அரசியல் விவகாரங்கள் நன்றாகவும் தாமதமின்றியும் நடக்கும் பொருட்டுப் பிரிட்டிஷ் இந்தியாவானது பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வோர் ஆங்கிலப் பிரபு இருந்து, இராஜப்பிரதிநிதியின் மேற்பார்வையில் அரசு செலுத்தி வருகிறார். இவருக்குக் 'கவர்னர்' என்று பெயர். நமது சென்னை மாகாணத்திற்கு இப்போது கவர்னராயிருப்பவர் **ஸ்டான்லி பிரபு.** மாகாணக் கவர்னர்களுக்கு மேலதிகாரியாக இருக்கின்றமையின் இராஜப் பிரதிநிதிக்குக் 'கவர்னர் - ஜெனரல்' என்றொரு பெயரும் உண்டு.

கவர்னருக்கு உதவியாக இரண்டு சபைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஒன்றுக்குக் காரிய நிர்வாக சபை (எக்ஸிகியூடிவ் கவுன்ஸில்) என்று பெயர். மற்றதற்குச் சட்ட நிர்மாண சபை (லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில்) என்று பெயர்.

காரிய நிர்வாக சபைக்குக் கவர்னர் உள்பட ஐந்துபேர் அங்கத்தினர் ஆவர். கவர்



அரசிறை நிர்வாகி



உள்நாட்டு நிர்வாகி



தன நிர்வாகி



சட்ட நிர்வாகி



கவர்னர் பிரபு



முதன் மந்திரி



இரண்டாம் மந்திரி



சட்ட நிர்மாண சபை



மூன்றாம் மந்திரி

நமது கவர்னரும், காரிய நிர்வாக சபையினரும், மந்திரிகளும்

னரே அச் சபைக்குத் தலைவர். இவர்களைத் தவிர, துரைத்தனம் நடத்துவதில் கவர்னருக்கு உதவிசெய்ய மூன்று மந்திரிமார் உண்டு. இவர்கள் குடிகளின் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள். துரைத்தன காரியங்களிற் சிலவற்றை இராஜாங்கத்தாரே நிர்வகிக்கிறார்கள். இராஜாங்கத்தாரே என்றால், கவர்னரும், காரிய நிர்வாகசபையினருமாம். இவர்கள் நிர்வகிக்கும் இலகாக்கள் போலீஸ், நீதி பரிபாலனம், அரசிறை, நீர்ப்பாசனம் முதலியனவாகும். இவை யல்லாமல் கல்வி, சுகாநுகூலம், மருத்துவம், விவசாயம், கைத்தொழில், உப்பு, கலால் (லாகிரி வஸ்துக்கள்), நாட்டுக் குடியாட்சி (Local Self-Government) முதலிய இலாகாக்களை மேற் சொல்லிய மூன்று மந்திரிமாரும் நிர்வகிக்கும்படி அவர்களுடைய வசத்தில் ஒப்புவித்து இருக்கிறார்கள். இவ்வாறு மாகாண துரைத்தனமானது இராஜ பாலனம், பிரஜா பாலனம் என்னும் இரு வகையாகவும் நடக்கின்றது.

சட்ட நிர்மாண சபையினரின் சங்கியை மாகாணத்தி லுள்ள ஜனங்களின் தொகைக்குத் தக்கபடி இருக்கும். இவர்களிற் சிலரைக் கவர்னர் நியமனஞ் செய்கிறார். மற்றவர்கள் ஜனங்களால் தெரிந் தெடுக்கப்படுகிறார்கள். கவர்னரால் நியமிக்கப்படுகிறவர்கள் ஸர்க்கார் உத்தியோகஸ்தராகவேனும் உத்தியோக மில்

லாதவர் களாகவேனும் இருக்கலாம். காரிய நிர்வாக சபையினர் நால்வரும் இச் சபையின் அங்கத்தினர்களாக இருக்கவேண்டுமென்பது அவசியம். மாகாண பரிபாலனத்துக்கு வேண்டிய சட்ட திட்டங்களைச் செய்யவும், வரவு செலவுக் கணக்குகளைப் பார்வையிட்டு வரையறுக்கவும் இச் சபையாருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், இச் சபையார் செய்யுஞ் சட்டங்கள் அனுஷ்டானத்திற்கு வருமுன் அவைகளைக் கவர்னரும், இராஜப் பிரதி நிதியும் அங்கீகரிக்க வேண்டும். சபையினருள் பெரும்பான்மையோர் குடிகளால் தெரிந் தெடுக்கப் பெற்றவர்கள். ஆகையால், பிரஜைகளுடைய அபிப்பிராயங்கள் துரைத்தனத்தாருக்கு எட்டுவதற்கு இடமுண்டு. ஆயினும், இச் சபையார் செய்யும் தீர்மானங்களைத் துரைத்தனத்தார் கட்டாயமாக நிறைவேற்றவேண்டும்என்ற நிர்ப்பந்தமில்லை.

இப்படியே ஒவ்வொரு மாகாணமும் ஏறக்குறைய இதே விதமான அரசாட்சியுடையதாக இருக்கிறது. ஒவ்வொரு மாகாணமும் பற்பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாக்கள் தாலூகாக்களாகவும், தாலூகாக்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு கலெக்டர், அசிஸ்டெண்டு கலெக்டர், டெபுடி கலெக்டர் முதலான அதிகாரிகள் உண்டு. இவர்களே அரசியல் விவகாரங்களை நடத்துகிறவர்கள்.

## 5. கிராமம்

குடும்பமாவது என்ன என்பதை முன்னே விளக்கினேம். ஒரே வீட்டிலுள்ள குடும்பத்தார், காலம் செல்லச்செல்ல, தங்கள் சௌக்கியத்தைக் கருதிப் பல குடும்பங்களாகப் பிரிந்து ஓரிடத்தில் வசிக்கிருர்கள். அங்கு அக் குடும்பங்களோடு சம்பந்தமில்லாத வேறு சில குடும்பங்களும் வந்து வசிப்பதுண்டு. இப்படிப் பல குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து வசிக்கும் இடத்திற்குக் கிராமம் என்று பெயர்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு தலைவன் இருப்பதுபோலவே ஒரு கிராமத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. பல குடும்பங்கள் சேர்ந்து வசிக்கும் கிராமத்தில் சண்டை சச்சரவுகள் நேரிடலாம். ஒருவர் சொத்தை, ஒருவர் அபகரிக்கலாம். கொலை களவு முதலிய குற்றங்கள் நடக்கலாம். ஜனங்கள் அறியாமையினுலும் அஜாக்கிரதையினுலும் ஆரோக்கியத்திற்கு ஏற்காத காரியங்களைச் செய்து கிராமத்தைப் பலவிதமான நோய்களுக்கு இடமாக்கிவிடலாம். இவ்விதமான குற்றங்களைத் தடுப்பதற்கே இராஜாங்கம் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது.

இராஜாங்கத்தின் அதிகாரியா யிருந்து கிராமத்தின் காரியங்களைப் பார்ப்பவனுக்குக் கிராமாதிகாரி என்று பெயர். அவன் செய்யும்

வேலைக்கு ஏற்றபடி அவனுக்குக் கிராம மாஜிஸ்ட்ரேட் என்றும், கிராம முன்சீப் என்றும், கிராமத் தலைவன் என்றும் பல பெயர்கள் வழங்கி வருகின்றன. தீர்வை வசூல் செய்தல், சிறிய குற்றங்களை விசாரணை செய்தல், இருபது



கிராம முன்சீப் கோர்ட்டு

ரூபாய்க்கு உட்பட்ட சிறு வியாச்சியங்களை விசாரித்துத் தீர்மானஞ் செய்தல், கிராமத்தில் சண்டை, சச்சரவு, கொலை, களவு முதலியன நடவாது பார்த்துக்கொள்ளுதல், கிராமத்தி லுள்ள சாலைகள், ஏரிகள், குளங்கள், கோயில்கள்

முதலியவற்றைக் கவனித்தல் முதலியன கிராமாதி காரியின் கடமையாகும்.

கிராமாதிகாரிக்கு உதவியாகக் கர்ணம் என்னும் கணக்குப் பிள்ளையும், வெட்டியான், தலையாரி முதலிய வேறு சில தாழ்ந்த வேலைக்காரர்களும் உண்டு. தீர்வை வசூல் செய்வதில் கர்ணம் கிராமாதிகாரிக்கு உதவிசெய்ய வேண்டும். அவனிடத்தில் கிராமத்திலுள்ள நிலங்களின் விஸ்தீர்ணம், அவற்றிலிருந்து வசூல் செய்யவேண்டிய தீர்வை முதலிய கணக்குகள் இருக்கும்.

வெட்டியானும் தலையாரியும் கிராமத்துக்குக் காவலாயிருந்து குற்றங்கள் நடவாதுபார்க்க வேண்டும். அப்போதைக் கப்போது நடக்கிற குற்றங்களைக் கிராமாதிகாரிக்குத் தலையாரி தெரிவித்து, குற்றவாளிகளைத் தண்டனைக்குக் கொண்டுவர வேண்டும்; வரி வசூல் சம்பந்தமான விஷயங்களைப்பற்றிக் கிராமாதிகாரி அனுப்புங் கடிதங்களையும் சமாசாரங்களையும் மேலதிகாரிகளிடத்திற் சேர்ப்பிக்க வேண்டும். இவ்விதமாகக் கிராமாதிகாரியே கிராமத்திற்கு ஒரு சிறிய அரசன்போலிருந்து, எல்லாக் காரியங்களையும் நடத்தி வருகிறான்.

## 6. குற்ற விசாரணை

சகல விதமான குற்றங்களையும் தடுத்துப் பிரஜைகளுக்கு க்ஷேமம் உண்டாகும்படி செய்வது இராஜாங்கத்தாருடைய கடமை. ஜனங்கள் கொலை, களவு, சண்டை முதலிய குற்றங்களைச் செய்தால் பல விதமான துன்பங்கள் உண்டாகும். ஆகையால், ஊரைப் பத்திரமாகப் பாதுகாப்பதற்காகவும், குற்றங்களைத் தடுப்பதற்காகவும் இராஜாங்கத்தார் ஊர்க் காவலாளரை (போலீஸாரை) ஏற்படுத்தியிருக்கின்றனர்.

ஏறக்குறைய ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் (தாணு) உண்டு. அங்கு ஒரு சப் இன்ஸ்பெக்டரும் எட்டு அல்லது பத்துச் சேவகரும் இருப்பார்கள். இதே மாதிரியாகத் தாலூகாக்களிலும் ஜில்லாக்களிலும் பல தாணுக்களில் போலீஸ் சிப்பந்திகள் உண்டு. தாலூகாக்களிலும் ஜில்லாக்களிலும் பட்டணங்களிலும் உள்ள சேவகரை மேற்பார்வை பார்க்கப் பல சப் இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், டெபுடி சூபரின்டெண்டென்டுகள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் மேலாக இன்ஸ்பெக்டர்-ஜெனரல் என்னும் மாகாணத் தலைமை யதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் மாகாணத்துப் போலீஸ் இலாகாவினுடைய வேலை முழுவதையும் கவனிக்கிறார்.

குற்றஞ் செய்தவர்களைக் கண்டுபிடிப்பது போலீசாரின் வேலையே தவிர அவர்களைத் தண்டிக்கப் போலீஸாருக்கு அதிகாரமில்லை. அதற்காக இராஜாங்கத்தார் கிராமங்களில் கிராமாதிகாரிகளையும், தாலூகாக்களில் ஸப்-மாஜிஸ்ட்ரேட்டுகளையும், ஜில்லாக்களில் மாஜிஸ்ட்ரேட்டு



மாஜிஸ்டிரேட் கோர்ட்டு

கள், ஜட்ஜூகள் முதலியபல நியாயாதிபதிகளையும் நியமித்து இருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் ஒவ்வொருவரும் எவ்வளவு தண்டனைவிதிக்கலாமென்றும், எவ்வளவு அபராதம் போடலாமென்றும் இராஜாங்கத்தார் வரையறுத்திருக்கின்றனர். இவர்கள் இருந்து குற்ற விசாரணை

செய்யு மிடங்களுக்குக் கோர்ட்டுகள் அல்லது நியாய ஸ்தலங்கள் என்று பெயர். இவர்க ளன்றி, பட்டணங்களில் அசுத்தம் செய்தல், சிறுசண்டையிடுதல் முதலிய அற்ப குற்றங்களை விசாரிப்பதற்குக் கௌரவமாஜிஸ்டிரேட்டுகளை யும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். கீழ்க்கோர்ட்டு மாஜிஸ்டிரேட்டுகள் செய்த தீர்மானம் திருப்தி யாக இல்லாவிட்டால், மேல் கோர்ட்டுக்கு அப் பீல் செய்து அதைத் திருத்திக் கொள்ளலாம். ஜில்லாக் கோர்ட்டு நியாயாதிபதிகள் எவ்வித மான தண்டனையையும் விதிக்கலாம். ஆனால், மரண தண்டனை மாத்திரம் மாகாணத்துப் பெரிய நியாயாதிபதியால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர் அங்கீகரித்தபின்னும், தக்க காரணம் இருந்தால், மரண தண்டனை பெற்ற குற்றவாளி மாகாணத்துக் கவர்னருக்காவது, இராஜப்பிரதிநிதிக்காவது மனுச்செய்து அத் தண்டனையை மாற்றிக்கொள்ளலாம்.

குற்றம் செய்தவர்களுக்கு அதிகாரிகள் அபராதம் போடுதல், அடித்தல், காவலில் வைத்தல், தூக்கிட்டுக் கொல்லல் முதலிய பல விதமான தண்டனைகளை விதிக்கிறார்கள்.

இவ்விதமாகக்குற்றங்களைத்தடுப்பதற்காக வும் குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மறுபடி குற்றஞ்செய்யாதபடி தண்டிப் பதற்காகவும் இராஜாங்கத்தார் செய்திருக்கும்

ஏற்பாடுகளுக்குக் கிரிமினல் அட்மினிஸ்ட்ரேஷன் என்று பெயர். நாம் ஒவ்வொருவரும் எவ்விதமான குற்றங்களுக்கும் ஆளாகாமல் நேர்மையும், யோக்கியதையும் உடையவர்களாயிருந்து இராஜ்ய பரிபாலன விஷயத்தில் இராஜாங்கத்தாருக்கு உதவி செய்ய வேண்டுவது நமது கடமையாகும்.

## 7. சிவில் அதிகாரம்

(திரவிய விவகாரம்)

கொள்ளல், கொடுத்தல், பற்றுவரவு, வியாபாரம் முதலிய விஷயங்களால் உண்டாகும் வியாச்சியங்களை விசாரித்துத் தீர்மானஞ்செய்வது திரவிய விவகார விசாரணை (ஸிவில் அட்மினிஸ்ட்ரேஷன்) எனப்படும். ஜனங்கள் பொருள் காரணமாகக் கேவலம் மிருகங்களைப் போல் சண்டை போடுவதுண்டு. இவ்விதமாக உண்டாகும் விவகாரங்களைத் தீர்ப்பதும் இராஜாங்கத்தாருடைய கடமையாகும்.

சில கிராமங்களில் இவ்விதமான விவாதங்களைத் தீர்ப்பதற்குக் கிராமத்திலுள்ள பெரிய மனிதரில் நான்கு ஐந்துபேர் ஏற்படுகிருர்கள். அவர்களுக்குப் பஞ்சாயத்தார் என்று பெயர்.

இன்னார்தான்பஞ்சாயத்தாராக இருக்கவேண்டு மென்று வழக்காளிகளே கோரிக்கொள்ளலாம். பஞ்சாயத்தார் செய்யும் தீர்மானத்திற்கு வழக் காளிகள் அடங்கிநடக்க ஒத்துக்கொள்ளவேண் டும். பஞ்சாயத்தார் பெரும்பாலும் கிராமத்தா ருடைய நடவடிக்கைகளை அறிந்துஇருப்பார்க ளாகையால், அவர்களுடைய தீர்மானம் நியாய மானதாகவே இருக்கும் என்பதற்குச் சந்தேக மில்லை. ஆகையால், அவ்விதமான தீர்மானங் களைத்துரைத்தனத்தாரும் அங்கீகரிப்பார்கள்.

பஞ்சாயத்தார் இல்லாவிட்டால், அவ்வித விசாரணைகளைக் கிராம முன்சீப்பு செய்து வரு கிறார். இவரே கிராமாதிகாரி. இருபது ரூபாய் க்கு மேற்படாத தொகைகளைக்குறித்த வியாச்சி யங்களை இவர் விசாரித்துத் தீர்மானம் செய்ய லாம். வழக்காளிகள் சம்மதிப் பத்திரம் எழு திக் கொடுக்கும்பக்ஷத்தில் 200 ரூபாய்க்கு மேற்படாத தொகைகளைக் குறித்த வியாச்சி யங்களையும் இவர் விசாரிக்கலாம். கிராமாதி காரிகளுடைய தீர்மானத்தை அந்த ஜில்லாவி லுள்ள டிஸ்ட்ரிக்டு முன்சீப்புக் கோர்ட்டார் நிறைவேற்றுவார்கள்.

ஸிவில்விவகாரங்களில்கிராமமுன்சீப்புக்கு மேற்பட்டஅதிகாரிக்குஜில்லாமுன்சீப்புஎன்று பெயர். இந்த ஸ்தானத்திற்குப் பி. ஏ. பட்டம்

பெற்றுச் சட்டப் பரீக்ஷையில் தேறினவர்களே நியமிக்கப் படுகிறார்கள். இவர்கள் விசாரணை செய்யும் வியாச்சியங்கள், சில்லறை வியாச்சியங்கள் (Small Causes) என்றும், அசல்வியாச்சியங்கள் (Original Suits) என்றும் இருவகைப் படும். 2,500 ரூபாய்க்கு மேற்படாத வியாச்சியங்களை ஜில்லா முன்சீப்பு விசாரணை செய்யலாம். பெருந்தொகை வழக்குகளில் இவர் செய்யும் தீர்மானங்களுக்கு அப்பீல் உண்டு. ஆனால், சில்லறை விவகாரங்களில் இவர் செய்யும் தீர்மானங்களுக்கு அப்பீல் கிடையாது.

டிஸ்ட்ரிக்டு முன்சீப்புக்கு மேற்பட்டவர் டிஸ்ட்ரிக்டு ஜட்ஜ். கீழ்க் கோர்ட்டுகளின்மேல் இவருக்கு அதிகாரம் உண்டு. இவர் 2,500 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகளைக் குறித்த வியாச்சியங்களையும், கீழ்க் கோர்ட்டுகளின் தீர்மானங்களின்மீது செய்யப்படும் அப்பீல்களையும் விசாரிக்கலாம். தமது ஜில்லாவிலுள்ள முன்சீப்புக்கோர்ட்டுகளைமேற்பார்க்கஇவருக்கு அதிகார முண்டு. சில இடங்களில் ஜில்லா கலெக்டரே அவ் விசாரணையைச் செய்யலாம்.

பெரியதாயும், ஜனநெருக்கமாயும் அநேக கிராமங்களை யுடையதாயு மிருக்கிற ஜில்லாக்களில் ஒரே டிஸ்ட்ரிக்டு கோர்ட்டில் எல்லா வழக்குகளையும் விசாரணை செய்ய முடியாது.

அப்படிப்பட்ட ஜில்லாக்களில் டிஸ்ட்ரிக்டு கோர்ட்டுக்குச் சகாயமாகச் சப்கோர்ட்டுகளை ஸ்தாபித்து இருக்கிறார்கள். விசாரணை செய்யும் நீதிபதிக்கு ஸப்-ஜட்ஜ் என்றுபெயர். ஸிவில் வழக்குகளில் டிஸ்ட்ரிக்டு ஜட்ஜுக்கு எவ்வளவு அதிகார முண்டோ அவ்வளவு அதிகாரமும் ஸப்-ஜட்ஜுக்கும் உண்டு. அவர் செய்த தீர்மானத்தின்மேல் ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்யலாம்.

10,000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையானால் டிஸ்ட்ரிக்டு கோர்ட்டுக்கு முதல் அப்பீலும் ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீலும் உண்டு. சில சமயங்களில் டிஸ்ட்ரிக்டு கோர்ட்டில் ஏராளமான ஸிவில் வழக்குகள் இருந்தால், அவற்றிற் சிலவற்றை சப்-கோர்ட்டுக்கு அனுப்புவார்கள்.

இவ்விதமான கிராமக் கோர்ட்டு, டிஸ்ட்ரிக்டு முன்சீப் கோர்ட்டு, ஜில்லாக் கோர்ட்டு, சப்-கோர்ட்டு முதலிய பல கோர்ட்டுகள் மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. இவை யனைத்துக்கும் மேலாக இராஜதானியின் தலைநகரில் ஒரு பெரிய கோர்ட்டு ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. அதற்கு ஹைகோர்ட்டு என்று பெயர். தலைநகரில் ஜன நெருக்கமும், வியாபாரமும், நாகரிகமும், செல்வமும், அவை சம்பந்தமா யுண்

டாகும் வழக்குகளும் அதிகமா யிருக்கு மல்லவா? மேலும், ஜில்லாக் கோர்ட்டுகளின் தீர்மானங்களை மாற்றும்படி செய்யப்படுகிற அப்பீல்களை விசாரணை செய்ய வேண்டிய கடமையும் ஏற்படுகிறது. ஆகையால், அப்படிப்பட்ட ஹை கோர்ட் ஒன்று இராஜதானியின் தலை நகரில் இருக்க வேண்டியது அவசியம்.



ஹை கோர்ட்

தலைநகரில் வரத்தக்க எல்லா வழக்குகளையும் ஹை கோர்ட்டாரே விசாரணைசெய்யச் சாத்தியப்படாது. ஆகையால், சில்லறைவழக்குகளை விசாரிக்க ஸ்மால் காஸ் கோர்ட்டு ஒன்றும், அதற்குச் சிறிது மேற்பட்ட வழக்குகளை

விசாரிக்க நகர ஸிவில் கோர்ட்டு (ஸிடி ஸிவில் கோர்ட்டு) ஒன்றுமாக இரண்டு வேறு கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்மால் காஸ் கோர்ட்டார் 2,000 ரூபாய் வரையிலுள்ள வழக்குகளையும், நகர ஸிவில் கோர்ட்டார் 2,500



ஹை கோர்ட்டு விசாரணை

ரூபாய் வரையிலுள்ள வழக்குகளையும் விசாரணை செய்யலாம். இந்த இரண்டு கோர்ட்டுகளும் ஹை கோர்ட்டின் பிரிவுகளாம்.

ஹை கோர்ட்டார் 2,500-க்கு மேற்பட்ட அசல் வழக்குகளை விசாரணை செய்வார்கள்.

எந்த விதமான ஸிவில் அல்லது கிரிமினல் வழக்குகளையும் விசாரிக்க இந்தக் கோர்ட்டா ருக்கு அதிகாரமுண்டு. ராஜதானியிலுள்ள ஜில் லாக்களிலிருந்து வரும் எவ்விதமான அப்பீல் களையும் ஹைகோர்ட்டாரே விசாரணை செய்ய வேண்டும். இந்த ஹைகோர்ட்டில் வேலைக்குத் தக்கபடிபலஜட்ஜுகளை நியமித்திருக்கிறார்கள். நமது இந்தியா தேசத்தில் சுமார் 2,400 நியாய ஸ்தலங்களை ஏற்படுத்தி ஆங்கில துரைத்தனத் தார் நீதியைப் பரிபாலித்து வருகின்றனர்.

## 8. லோகல் போர்டு

(தலக் குடியாட்சி)

ஆங்கிலத்தவர் நமது தேசத்தைப் பாது காத்துப் பலவிதமான நன்மைகளைச் செய்து நீதியாக அரசுசெலுத்தி வருகின்றனர். ஒரு குடும்பத்திலுள்ள தந்தை தன் பிள்ளைகளைப் படிப்படியாகக் குடும்ப விஷயங்களில் பழக்கி, குடும்ப காரியங்களை அவர்களிடத்தில் ஒப்பிக் கப் பிரயத்தனப்படுகிறான்; அதுபோலவே நமது ராஜாங்கத்தாரும் நாடாளும் வித்தையில் நம்மைப் பழக்கி வருகின்றனர். நமது தேசம் பல மாகாணங்களாகவும், ஜில்லாக்களாகவும், தாலூகாக்களாகவும்,கிராமங்களாகவும்பிரிக்கப்

பட்டிருக்கிறது. அந்தந்த இடங்களில் சாலைகளையும் வீதிகளையும் அமைத்தல், வைத்திய சாலைகளையும் வித்தியா சாலைகளையும் ஸ்தாபித்தல், சத்திரம் சாவடிகளைக் கவனித்தல், நோய்களைத் தடுப்பதற்கேற்ற வழிகளைத் தேடுதல், இவற்றிற்கு வேண்டிய செலவுக்காகப் பலவிதமான வரிகளை விதித்துக் கொள்ளல் என்னும் இக்காரியங்களைத் துரைத்தனத்தார் அந்தந்தத் தலத்துக்குடிகளுக்குஒப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொருகிராமத்தாரும், பட்டணத்தாரும், தாலூகாக்காரரும், ஜில்லாக்காரரும் மேற்கூறிய விஷயங்களைப்பரிபாலித்து வருவதற்குஸ்தலக்குடியாட்சி (Local Board) என்றுபெயர். குடிகளுக்கு இந்தச் சுதந்தரம் 1844-ஆம் வருஷத்தில் இந்திய ராஜப் பிரதிநிதியாயிருந்த ரிப்பன் பிரபுவால் கொடுக்கப்பட்டது.


ரிப்பன் பிரபு

இந்தச் சுதந்தரத்தின்படி கிராமங்களில் யூனியன் (Union) என்றும், தாலூகாக்களில் தாலூகா போர்டு (Taluk Board) என்றும், ஜில்லாக்களில் ஜில்லா போர்டு (District Board) என்றும், பட்டணங்களில் முனிஸிபாலிடி (Municipality) என்றும், பெரிய

நகரங்களில் கார்ப்பொரேஷன் (Corporation) என்றும் பலவிதமான பரிபாலன சபைகள் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன.

**யூனியன் பஞ்சாயத்து** — இது கிராமங்களில் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. கிராமத்தின் விஸ்தீர்ணத்திற்கும் வேலைக்கும் தக்கபடி 5 முதல் 12 பேர் வரையில் இதற்கு அங்கத்தினர்களாக நியமிக்கப்படுவார்கள். கிராமாதிகாரி இதனில் ஓர் அங்கத்தினராக இருத்தல்வேண்டும். மற்றவர்களில் சிலரைத் துரைத்தனத்தாரும், சிலரை வரிசெலுத்துகிற கிராமத்தாரும் நியமிக்கிறார்கள். இந்தச் சபையின் தலைவருக்குக் கிராமச் சபைத்தலைவர் (யூனியன்சேர்மன்) என்று பெயர். தெருக்கள் கால்வாய்கள் குளங்கள் கிணறுகள் முதலியவை சுத்தமாயும் சரியாயும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுதலும், குப்பைமுதலிய அசுத்தமான வஸ்துக்களை அகற்றுதலும், தெருக்களில் இராக்காலங்களில் விளக்கேற்றுதலும், தொத்துநோய் முதலிய வியாதிகளைத் தடுத்தலும் இச்சபையின்கடமைகளிற் சிலவாம். இச் சபையார் இந்தச் செலவுகளுக்காக வீட்டுவரி, குறட்டுவரி, பந்தல்வரி முதலிய வரிகளைப் போடலாம். வண்டிகள் நிறுத்தும் பேட்டைகளுக்கு வரி போடலாம். அதிகமாகப் பணம் வேண்டியிருந்தால் தாலூகாபோர்டிலிருந்துவாங்கிக்கொள்ளலாம்.

**தாலூகா போர்டு**—இது தாலூகா சபை. இதனில் 12 முதல் 15 வரையில் அங்கத்தினர்களுண்டு. கல்வியிலும் செல்வத்திலும் மிகுந்த பெரிய மனிதரை இச் சபைக்குத் தலைவராக நியமித்துவருகிறார்கள். தாலூக்காவைச்சேர்ந்த விஷயங்களில் நல்ல அனுபவமுடையவர்களும் தனவான்களுமே இச் சபைக்கு அங்கத்தினர்களாக நியமிக்கப்படுவார்கள். இச் சபை மாதம் ஒரு முறை கூடும். இதன் தலைவருக்குப் **பிரசிடேண்டு** (President) என்று பெயர். அவருக்கு உதவியாக வேறொரு அங்கத்தினரை உபநாயகராக (**வைஸ் - பிரசிடேண்டாக**) நியமிப்பார்கள். இந்தச் சபையின் அங்கத்தினர்கள் 3 வருஷ காலம் விவகரிக்கலாம், அதன் பின் அவர்கள் மறுபடி நியமனம் பெற வேண்டும்.

**ஜில்லா போர்டு**—இது ஜில்லா விஷயங்களைக்கவனிப்பதற்காக ஏற்படுத்தப்படும்சபை. ஒவ்வொருஜில்லாவிலும் இப்படிப்பட்டசபை ஒன்று உண்டு. முன்னே ஜில்லா கலெக்டரே இச் சபைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுவந்தார். இப்பொழுது கல்வியிலும், செல்வத்திலும், அந்தஸ்திலும் உயர்ந்த மனிதரை நியமித்து வருகிறார்கள்.

இந்தச் சபையில் **24** முதல் **40** வரையில் அங்கத்தினர்களை நியமிக்கிறார்கள். அவர்கள்

தக்க அந்தஸ்துள்ளவர்களாக இருப்பார்கள். இச் சபை அடிக்கடி கூடும். இந்தச் சபைத் தலைவருக்கும் பிரசிடெண்டு என்றுதான் பெயர். வைஸ் - பிரசிடெண்டு ஒருவரும் உண்டு. தாலூகா போர்டும் ஜில்லா போர்டும் சேர்ந்து லோகல் போர்டுகள் எனப் பெயர் பெறும். இந்த இரண்டு சபைகளின் கடமைகளும் ஏறக் குறைய ஒரே மாதிரியாகும்.

இந்தச் சபையினர் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன : சாலை (ரோட்டு)களைப் புதிதாக அமைத்தல், பழைய சாலைகளை மராமத்து செய்தல், வைத்திய சாலைகளையும் சத்திரங்களையும் ஸ்தாபித்தல், வாராவதிகள், கக்கூசுகள், கசாப்புக் களங்கள் முதலியவற்றைக் கட்டிப் பராமரித்தல், வண்டிப் பேட்டைகளை ஏற்படுத்துதல், பள்ளிக்கூடங்களை அமைத்தல் முதலியவைகளே. வீட்டு வரி போடவும், சாலைகளில் வண்டிச் சுங்கம் வசூல் செய்யவும், பந்தல்களுக்கு வரிவாங்கவும், வண்டிப்பேட்டைகளில் தங்கும் வண்டிகளுக்கு வாடகை வாங்கவும் இச்சபையாருக்கு அதிகாரம் உண்டு. இச் சபைகள் துரைத்தனத்தாருடைய மேற்பார்வையில் நடை பெறுகின்றன.

**நகரச் சங்கங்கள் (முனிஸிபாலிடிகள்)**— இந்தச் சங்கங்கள் பட்டணங்களில் ஏற்படுத்

தப்படுகின்றன. இச் சங்கத்தின் தலைவருக்குச் சேர்மன் (Chairman) என்று பெயர். ஒரு சங்கத்திற்கு 12 முதல் 24 வரையில் அங்கத்தினர்கள் உண்டு. அவர்களுக்குக் **கவுன்ஸிலர்கள்** என்று பெயர். சிலரைத் துரைத்தனத்தார் நியமிப்பர்: மற்றவர்களை வரி கொடுக்கும்



சென்னைக் கார்ப்பொரேஷன்

ஜனங்கள் தெரிந்தெடுப்பார்கள். சபைத்தலைவர் பெரும்பாலும் கவுன்ஸிலர்களாலும், சில சமயங்களில் துரைத்தனத்தாராலும் நியமிக்கப்படுவார். சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய நகரங்களிலுள்ள சங்கங்களுக்குக் **கார்பொரேஷன்** என்று பெயர்; சங்கத் தலை

வர் **பிரஸிடேண்டு** எனப்படுவர். கவுன்ஸிலர்கள் 50 பேர்வரையில் உண்டு. நகரச் சங்கத்தவர்களுடைய ஏற்பாடுகளையும் தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்குத் துரைத்தனத்தார் ஓர் உத்தியோகஸ்தரை நியமிக்கிறார்கள். அவருக்குக் **கமிஷனர்** என்று பெயர். இச் சங்கத்தவர்கள் மாதத்திற் கொருமுறையும், அவசரம் நேரிடும் வேறு சமயங்களிலும் கூடுவார்கள். வீட்டு வரி, சாலைச் சுங்கம், நில வரி, வண்டி வரி, நீர் வரி, தொழில் வரி முதலிய பல வரிகளைப் போட இச் சங்கங்களுக்கு அதிகாரம் உண்டு. இவைகளின் கடமைகள் லோகல் போர்டுகளின் கடமைகளைப் போன்றனவே.

## 9. வோட்டு செய்யும் முறை

மேற் சொல்லிய சபையின் அங்கத்தினர் பெரும்பாலரைத் தெரிந்தெடுக்கும் உரிமை குடிகளுக்கு உண்டு என்றுசொல்லி யிருக்கிறோம். குடிக ளெல்லாருக்குமே அவ் வுரிமை இல்லை. 21 வயது வாய்ந்து, எவ் வகையிலாவது சர்க்காருக்கு வருஷ வாரியில் 10 ரூபாய்க்கு மேற்பட்டவரி செலுத்துகிறவர்கள் (ஸ்திரீயும் புருஷனும்) அவ்வுரிமை யுள்ளவர்கள் ஆவார்கள் ; ரூ - 240 - க்குக் குறையாத குடிக்

கூலி கொடுக்கிறவர்களுக்கும், பி. ஏ. பட்டம் முதலான சிற்சில யோக்கியதை உடையவர்களுக்கும் அவ்வுரிமை உண்டு. அவ்வுரிமை **வோட்டுரிமை** எனப்படும். அங்கத்தினரைத் தெரிந்தெடுப்பதற்கு **இலெக்ஷன்** என்று பெயர். அங்கத்தினராக நியமனம் பெறவிரு



போலிங் ஸ்டேஷன்

ப்புவோர் **காண்டிடேட்** (அபேக்ஷகர்) எனப் படுவர். அவர்களை நியமிக்க வோட்டுக் கொடுக்கிறவர்கள் **வோட்டர்கள்** எனப்படுவார்கள். வோட்டுக் கொடுக்கும் இடத்திற்குப் **போலிங் ஸ்டேஷன்** என்று பெயர். அவ்விடத்தில் இருக்கும் அதிகாரிக்குப் **போலிங் ஆபீஸர்** என்றுபெயர். வோட்டைக்குறிக்கும் சீட்டுக்குப் **பாலட் பேபர்** (குடவோலை) என்று பெயர்.

அங்கத்தினராக நியமனம் பெற விரும்புகிற அபேக்ஷகர்கள் அரசியல் விவகாரங்களில் தங்களுக்கு உள்ள அனுபவங்களையும், தாங்கள் குடிகளுக்குச் செய்ய நினைத்திருக்கிற நன்மைகளையும், தம்முடைய அரசியற் கொள்கைகளையும் வோட்டர்களுக்கு வெளியிட்டுத் தங்களை நியமிக்கும்படி அவர்களை நாடுவார்கள்.

வோட்டு கொடுக்கும் தினத்தன்று வோட்டரானவன் போலிங் ஸ்டேஷனுக்குப் போய் அவ்விடத்திலுள்ள உத்தியோகஸ்தரிடம் தன்

| | |
|---|---|
| 1. இராமன் | × |
| 2. கிருஷ்ணன் | |
| 3. கோபாலன் | × |

பாலட் பேபர்

பெயர், ஊர் அல்லது தெரு, வீட்டின் நெம்பர் முதலியவைகளைச் சொல்ல வேண்டும். அவர் கொடுக்கும் பாலட் பேபரை வாங்கிக்கொண்டு

தனித்துப் போக வேண்டும். தான் அங்கத்தினர்களாக நியமிக்கப் பிரியப்படுகிறவரின் பெயர்களுக்கு எதிரில், × இந்தப் படி குறியிட்டு, அந்தக் காகிதத்தை மடித்து, உத்தியோகஸ்தரின் முன்பாக முத்திரையிட்டு வைத்திருக்கும் **பாலட் பெட்டி**யில் போட வேண்டும்.

செங்கற்பட்டு ஜில்லாவிலிருந்து சட்ட சபைக்கு வர வேண்டியவர்கள் இருவரென்று வைத்துக்கொள்வோம். இந்த ஜில்லாவிற்குக் காண்டிடேட்டுகளாக (1) இராமன், (2) கிருஷ்ணன், (3) கோபாலன் என்னும் மூவர் நிற்பார்களானால், இவர்களில் இருவரைத்தான் தெரிந்தெடுக்க வேண்டும். ஆதலால், பாலட் பேபரில் உள்ள மூன்று பேர்களில் இருவர் பேர்களுக்கு முன்பாகத்தான் × இந்தக் குறி வைக்க வேண்டும். இக் குறியன்றி வேறு ஏதும் எழுதக் கூடாது. மூன்று பேர்களுக்கும் குறி போடக் கூடாது. அப்படிச் செய்தால் வோட்டர்கள் தங்கள் சுதந்தரத்தை வீணாக்கினவர்களாவார்கள். வோட்டர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களானால், போலிங் உத்தியோகஸ்தரிடம் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும். அவர் பேர்களை வாசித்துக் காட்டி அவ் வோட்டர்கள் சொல்லுகிற அபேக்ஷகர்களின் பெயருக்கு எதிரில் × இக் குறியை யிட்டுப் பெட்டியில் போடுவார்.

பாலட் பேபரில் வோட்டுக் குறியை யிடும் முன்னமே, அங்கத்தினர்களாக விரும்புகிற மூவர்களுள் எவர்கள் அறிவாளிகள், சுயநலம் கருதாதவர்கள், தேசத்திற்கும், ஜனங்களுக்கும் உபகாரம் செய்யும் நல்ல எண்ணத்துடன் பொதுக்காரியங்களில் உழைக்கக் கூடியவர்கள் என்று வோட்டர் விசாரித்தறிதல் வேண்டும். அப்படிப்பட்ட யோக்கியதை யுள்ளவர்களுக்கே வோட்டுச் செய்யவேண்டும். ஏனெனில், இப்படித் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் வசத்தில்தான் நமது தேச நன்மையும், பொதுஜன க்ஷேமமும் இருக்கின்றன.

வோட்டர்கள் எல்லாரும் வோட்டுக் கொடுத்து முடிந்ததும் பாலட் பெட்டியை வேறு இடத்திற்குக் கொண்டுபோய் இராமன், கிருஷ்ணன், கோபாலன் என்ற பெயர்களின் படி பாலட் பேபர்களைப் பிரித்துக் கணக்கிடுவார்கள். அவைகளுள், இராமன் 120 வோட்டுகளும், கிருஷ்ணன் 94 வோட்டுகளும், கோபாலன் 99 வோட்டுகளும் பெற்றிருந்தால், அதிக எண்ணிக்கை பெற்ற இராமனும், கோபாலனுமே அச் சபைக்குத் தெரிந் தெடுக்கப்பட்ட அங்கத்தினர் ஆவார்கள்.

## 10. ரேவினியூ இலாகா

(அரசிறை)

ஆங்கில துரைத்தனத்தார் நமக்குப் பல விதமான சௌகரியங்களைச் செய்து நம்மை ஆண்டு வருகின்றனர். அவ்விதமான சௌகரியங்களைச் செய்வதற்கு அவர்களுக்குப் பணம் வேண்டும். ஆகையால், அவர்கள் இந்தப் பணத்தைப் பிரஜைகளிட மிருந்து வரிகளாக வசூல் செய்கிறார்கள். இவ்விதமாக வசூல் செய்கிற பணம் அரசிறை அல்லது ரெவினியூ எனப்படும். துரைத்தனத்தாருக்கு நாம் பல வகையான இறைகளைச் செலுத்துகிறோம். அவற்றுள் முக்கியமானது நிலத் தீர்வை அல்லது நிலவரி. இது ஜமீன்வரி என்றும், இனும் வரி என்றும், தரம்வாரி வரி என்றும் பல வகைப்படும். ஒரு கிராமத்தின் வரியையாவது பல கிராமங்களின் வரியையாவது அங்குள்ள பட்டாதார்களிடத்தி லிருந்து நேரே துரைத்தனத்தார் வசூல்செய்யாமல், அவைகளை ஒருவருக்குச் சாசுவதமாகக் குத்தகைக்குவிட்டு, வசூல் செய்கிற தொகைக்கு ஜமீன் வரி என்று பெயர். அப்படிக் குத்தகையாக வரி செலுத்துகிறவர் ஜமீன்தார் எனப்படுவர். சர்க்கார் கிராமங்களில் நிலமுடையவர் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய வரி எவ்வளவு என்று துரைத்தனத்தார் கண்டிப்பாகத் தெரிவித்துவிடுகிறார்கள்.

ஜமீன் கிராமங்களுக்கு மொத்தமாக வரி இவ்வளவு என்று துரைத்தனத்தார் குறித்து விடுகிறார்கள். ஜமீன்தார்கள் அவ் வரித் தொகையைச் செலுத்திவிட்டு குடியானவர்களிடமிருந்து தனித்தனியே வரியைத் தாங்கள் வசூல் செய்துகொள்ளுகிறார்கள்.

முற்காலத்துத் துரைத்தனத்தார் ஆலயம் சத்திரம், பாடசாலை முதலிய தர்ம ஸ்தாபனங்களுக்கும், தங்களிடத்தில் நன்றாய் ஊழியஞ் செய்தவர்களுக்கும் நிலங்களைத் தீர்வை இல்லாமல் இனமாகக் கொடுத்திருந்தார்கள். இந்த நிலங்களுக்கு இறையிலி, இனம் நிலங்கள், **மானியங்கள்** என்று பெயர். இப்பொழுது இவற்றில் சில நிலங்களுக்கு முழு வரி ஏற்படுத்தி வசூல் செய்கின்றனர்; வேறு சில நிலங்களுக்குச் சொற்ப வரி வசூல் செய்கின்றனர்; இன்னுஞ் சில நிலங்களுக்குத் தீர்வையே வாங்குவதில்லை.

முற்காலத்தில் குடிகள் தங்கள் நிலத்தில் பயிரிட்டுத் தேறுகிற மாசூலில் ஒரு பகுதியை அரசருக்கு இறையாகக் கொடுத்து வந்தார்கள். இதற்குத் **தானியத் தீர்வை** என்று பெயர். இக்காலத்து ஆங்கில துரைத்தனத்தார் அந்த முறையை முற்றும் ஒழித்து, நிலங்களின் தன்மைக்கும், பரிமாணத்துக்கும் தக்கபடி பணமாகத் தீர்வை வாங்குகின்றனர். இதற்கு

**ரோக்கத் தீர்வை** என்று பெயர். இந்த ரோக்கத் தீர்வைகளை வசூல் செய்ய ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒருகலெக்டர், அஸிஸ்டெண்ட் கலெக்டர்கள், டெபுடி கலெக்டர்கள், தாஸில்தார்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், கிராம முன்ஸிப்புகள் ஆகிய இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவருக்குள்ளும் கலெக்டரே பெரியவர்.

நிலத்தீர்வையேயன்றி, ஏற்றுமதி,இறக்குமதியாகிற சாமான்களுக்குத் துரைத்தனத்தார் வரி வசூல் செய்கிறார்கள். பிரஜைகளுடைய மொத்த ஆதாயத்தில் ஒரு பகுதியை ஆதாய வரியென வாங்கிக்கொள்கிறார்கள் சாசனங்களெழுதுகிற முத்திரைக்கடிதங்கள், தபால்தலைகள் முதலியவற்றை விற்று வருமானம் அடைகிறார்கள். தந்தித் தபால், இருப்புப்பாதை, நாணயசாலை ஆகிய இவைகளை வைத்து நடப்பிப்பதனாலும், இவர்களுக்கு வரும்படி உண்டு. உப்பு, கள், சாராயம், அபின், கஞ்சா முதலியவற்றின் மீதும் தீர்வை வசூல் செய்கிறார்கள். இவ்விதமாகத் துரைத்தனத்தாருக்கு வருமானம் அதிகம்உண்டு. இதுவல்லாமல், இந்தியச் சிற்றரசர்கள் கட்டுகிற கப்பத் தொகையும் சேர்கின்றது. இப்படிச் சேர்கிற வரும்படியைக் கொண்டு அவர்கள் துரைத்தனஉத்தியோகஸ்தர்களுக்கும், காப்புப் படையினருக்கும் சம்ப

ளங்கள் கொடுத்துக் குடிகளுக்கும் பலவிதமான நன்மைகளைச் செய்து வருகின்றனர்.

மாகாணத்து வருமான விஷயங்களெல் லாம் நான்கு அங்கத்தவர்களடங்கிய ஒரு சபை யாரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அவர் களில் இருவர் நிலவரி சம்பந்தமான விஷயங்



சென்னை ரெவினியூ போர்டு

களையும், ஒருவர் நில அளவை, தீர்வை நிர்ண யித்தல்முதலியவைகளையும்,மற்றொருவர்உப்பு, சாராயம் ஏற்றுமதி, இறக்குமதி முதலியவைக ளின் வரியையும் சில்லறை வரிகளையும் கவனிப் பார்கள். இந்தச் சபைக்கு **ரெவினியூ போர்டு** (Revenue Board) என்று பெயர். இவ்விதமான சபைகள் ஒவ்வொரு மாகாணத்திலும் உண்டு.

## 11. உப்பு இலாகாவும், கலால் அப்காரி இலாகாவும்

உப்பு, கள், சாராயம் முதலியவைகளின் மீது வரி வசூல் செய்கிறார்களென்று மாத்திரம் முன்னே சொன்னோம். அவையும் முக்கிய மானவை யாதலால், அவற்றைக் குறித்துக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுவோம்.

**உப்பு வரி** — உப்பை உபயோகியாதவர் ஒருவரும் இல்லை. கடலோரமாகப் பாத்திகளைக் கட்டி, உப்புஜலத்தை அவற்றில் நிரப்பி, வெயிலிற் காயவிட்டால், உப்பு உண்டாகிறது. ராஜபுதனத்தில் உப்பேரிகளிலிருந்தும் உப்பு எடுக்கப்படுகிறது. சில மலைகளிலிருந்தும் உப்பை எடுக்கிறார்கள். இங்கிலாந்தி லிருந்தும் உப்பு நமது தேசத்திற்கு வருகிறது. ஆனால், துரைத்தனத்தாரும், அவர்களுடைய உத்தரவு பெற்ற ஜனங்களும் மாத்திரமே உப்பு உற்பத்திசெய்யலாம். உப்பு விளையும் இடங்களுக்கு உப்பளங்கள் என்று பெயர். நமது மாகாணத்தில் சுமார் 70 உப்பளங்கள் இருக்கின்றன. உத்தரவு பெற்றவர்கள் தவிர வேறு எவரும் உப்பைப் பயிரிடக்கூடாது. உப்பைப் பயிரிடுகிறவர்கள் வரி செலுத்தவேண்டும். இந்தவரிஎவ்வளவென்று துரைத்தனத்தார் நிர்ணயித்து இருக்கிறார்கள். இந்த வரியை உப்புப் பயிரிடுகிறவர்கள் அதன்

விலையில் ஏற்றியே விற்பார்கள். ஆகையால், நாமெல்லோரும் உப்பு வரி செலுத்துகிறவர்கள் ஆகிறோம். 1903ஆம் உப்பு வரி மணங்கு ஒன்றுக்கு இரண்டரை ரூபாயாக இருந்தது. அதனை இப்பொழுது மணங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள்.

**கள்ளு, சாராயம் இவைகளின் தீர்வை**— பனை, தென்னை, ஈந்து முதலிய மரங்களிலிருந்து கள் இறக்குகிறவர்கள் ஸர்க்காருக்குப் பணம் கட்டி உத்தரவு பெறவேண்டும். சாராயம் செய்கிறவர்களும் பணம் கொடுத்தே உத்தரவு பெற வேண்டும். இங்கிலாந்து முதலிய தேசங்களிலிருந்து வரும் பிராந்தி, விஸ்கி, ஜின், பீர் முதலிய சாராய தினுசுகளுக்கும் தீர்வையுண்டு. கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை உற்பத்தி செய்பவர்களும் வரி கொடுக்க வேண்டும். ஜனங்கள் இவைகளை உபயோகியாதபடி செய்வதற்கு இவைகளின் விலையை ஏற்ற வேண்டுமென்பது சிலருடைய கொள்கை. இக் கொள்கையைமேற்கொண்டு துரைத்தனத்தார் இவைகளின் மீதுள்ள வரியை அதிக மாக்கி யிருக்கிறார்கள். வரியானது சரக்கின் மீது சுமத்தப் படுவதனால், விலை அதிகப்படுகின்றது.

மேலே சொன்ன வஸ்துக்களுள் எதனையும் பிரஜைகள் தங்கள் இஷ்டப்படி செய்யவும்

கூடாது, விற்கவுங் கூடாது. திருட்டுத்தன மாகச் சிலர் கள் இறக்குகிறார்கள். சிலர் சாராயம் காய்ச்சுகிறார்கள். இவைகளைச் சிலர் உத்தர வில்லாமல் விற்கிறார்கள். சிலர் இவைகளில் ஜலத்தைக் கலந்து விற்கிறார்கள். இவ்வித மான குற்றங்களைத் தடுக்கவும், இச் சரக்கு களினால் வரத் தக்க வரும்படியை வசூல் செய்யவும் துரைத்தனத்தார் பல உத்தியோ கஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். டெபுடி கமி ஷனர், அஸிஸ்டெண்ட் கமிஷனர், இன்ஸ் பெக்டர், ஸப்-இன்ஸ்பெக்டர் முதலிய பல உத் தியோகஸ்தர்களை ஒவ்வொரு ஜில்லாவிலும் காணலாம். இவர்கள் அனைவரும் ரெவினியூ போர்டு அங்கத்தினர்களுள் ஒருவரான ஸால்ட் அண்டு அப்காரி கமிஷனருடைய அதிகாரத் திற்கு உட்பட்டவர்களாவர். இந்த இலாகாவினா லும் ஸர்க்காருக்கு வருமானம் அதிகம் உண்டு.

## 12. காட்டு இலாகா

காடுகள் மனிதருக்கு மிகவும் பிரயோஜன மானவை. மழை பெய்வதற்குக் காடுகள் முக் கிய ஆதாரம் என்பார்கள். காடுகளில் மரங் களும், செடிகளும் அடர்ந்திருப்பதனால் அவை எப்பொழுதும் குளிர்ச்சியா யிருக்கும். ஆடு

மாடுகளுக்கு வேண்டிய புல், பூண்டுகள் அங்கு விசேஷமாக உண்டு. சில காடுகளில் நதிகள் பாய்வதனுல் ஜல சௌக்கியமும் உண்டு. இயற்கை வளம் மிகுந்த மலைகளும், காடுகளும் கண்ணுக்கு இனிய காட்சி தரும், மனத்திற்கு உற்சாகமும் ஊட்டும். இக் காரணங்களினுலேயே நமது முனிவர்கள் தவஞ்செய்யக் காட்டுக்குப் போனதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

காடுகளில் தேக்கு, கருங்காலி, நூக்க மரம், பாலை, மூங்கில் முதலிய பல விதமான அரிய விருக்ஷங்கள் வளர்கின்றன; விறகுக்கு வேண்டியகருவேல், புளி, வேம்பு முதலிய மரங்களும் உண்டு; யானை, சிங்கம், புலி, கரடி, மான் முதலிய மிருகங்களும், மயில் முதலிய பக்ஷி ஜாதிகளும் வசிக்கின்றன. யானைத் தந்தம், மான் கொம்பு, மயிலின் தோகை முதலியவை மிகவும் உபயோகமான வஸ்துக்கள். பல விதமான பழங்களும், தேன், மெழுகு முதலிய வஸ்துக்களும் காட்டில் அகப்படும்.

ஆகையால், காடுகளினுலும் ஸர்க்காருக்கு வரும்படி உண்டு. அவற்றை அழிப்பதனுல் அவ் வரும்படி குறையும். ஆகையால், ஜனங்கள் அறியாமையினுல் காடுகளை இஷ்டப்படி வெட்டி அழித்துவிடாதபடி ஸர்க்காரார் ஜாக்கிரதையாகப் பார்த்து வருகின்றனர்.

காடுகளி லுள்ள மரங்களை வெட்டுவதற்கும், அங்குள்ள புல் நிலங்களில் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கும் ஜனங்க ளிடத்தில் வரி வசூல் செய்கிறார்கள். இவ்விதமான வரிகளை வசூல் செய்வதற்கும், உபயோகமான பெரிய மரங்களைப் பாலித்து, அவற்றின் காய், கனி முதலியவற்றை விற்பதற்கும் அவர்கள் பல உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.



ரேஞ்சரது பழைய உடை

நமது மாகாணத்தில் உள்ள காடுகளை மூன்று ஸர்க்கிள்களாகப் பிரித்து இருக்கிறார்கள். ஸர்க்கிள் என்பது ஒரு வட்டம். வடக்கு வட்டம், நடு வட்டம், தென் வட்டம் என மூன்று வட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வட்டத்திற்கும் **கன்ஸர்வேட்டர்** (பாலனாதிகாரி) ஒருவரை நியமித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டத்திலும் பல ஜில்லாக்கள் அடங்கி யிருக்கும். ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள காடுகளைப் பராமரிக்கும் தலைவர் ஒருவர் உண்டு. அவருக்குப் **பாரெஸ்ட் ஆபீஸர்** என்று பெயர். ஒவ்வொரு ஜில்லாக் காடுகளையும் பல ரேஞ்சுகளாக (பத்திகளாக)ப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பத்திக்கும் ஒரு **ரேஞ்ஜர்** உண்டு. இவர்களுக்கு உதவி செய்வதற்குப் பல **பாரெஸ்**

டர்களும், பாரெஸ்ட் கார்டுகளும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்; இவர்கள் அனைவரும் கன் ஸர்வேட்டருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு வேலை செய்ய வேண்டும். கன்ஸர்வேட்டர் நேரே ரெவினியூ போர்டாரின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்.

நாம் மேலே விவரித்த வரி வகைகளன்றி, யானை முதலிய சில மிருகங்களைப் பிடித்து விற்பதனாலும், காடை, கௌதாரி முதலிய காட்டுப் பறவைகளைப் பிடிப்பவர்களிடத்தில் வரி வசூல் செய்வதனாலும் வரும்படி உண்டு.


ரேஞ்சரது புதிய உடை

காட்டு இலாகாவில் உத்தியோகம் பெற விரும்புவோருக்காக இமய மலைச் சாரலில் டேராடூன் என்னுமிடத்தில் ஒரு பெரிய கலாசாலை உண்டு. அங்குப் பயின்று, தேறினவர்களுக்கே இந்த இலாகாவில் உத்தியோகம் கொடுப்பார்கள்.

நமது இந்தியா தேசத்தில் 87,000 சதுர மைல் விஸ்தீர்ண முள்ள காடுகள் இருக்கின்றன. இவற்றி லிருந்து சுமார் 3 கோடி ரூபாய் வருஷ வாரியில் ஸர்க்காருக்கு வருமானம் வருகிறது.

## 13. மாரமத்து இலாகா

துரைத்தனத்தார் பற்பல கட்டடங்களைக் கட்டுகின்றனர்; கால்வாய்களை வெட்டுகின்றனர். அற்புதமான வாராவதிகளை அமைக்கின்றனர்; இவ்விதமான விஷயங்களைக் கவனிப்பதற்கு ஓர் இலாகாவை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இந்த இலாகாவுக்கு எஞ்சினீரிங் இலாகா, அல்லது கட்டட விவகார இலாகா என்று பெயர்.

முதலில் நமது துரைத்தனத்தார் சேனைகள் தங்குவதற்கு வேண்டிய வீடுகளை மாத்திரம் கட்டிவந்தார்கள். டல்ஹவுசி பிரபு இராஜப் பிரதிநிதியாயிருந்த காலம் முதல் வேறு பல வகைக் கட்டடங்களையும் கட்டி வருகின்றனர். ஆகையால், இந்த இலாகா சுமார் 65 வருஷங்களுக்குமுன் ஏற்பட்டது.

இந்த இலாகாவின் வேலைகளாவன — கட்டடங்களைக்கட்டுதல், வாராவதிகளை அமைத்தல், கால்வாய்களை வெட்டுதல், தெருக்களைப் போடுதல், அணைக்கட்டுகளை அமைத்தல், சிதைந்த கட்டடங்களைப் பழுது பார்த்துப் புதுப்பித்தல் முதலியனவாம்.

கட்டடங்கள் — கல்வி கற்பிப்பதற்கு வேண்டிய கலாசாலைகளும், கோர்ட்டுகள் என்று சொல்லப்படுகிற நியாயஸ்தலங்களும், வியாதிக்

காரர்களுக்கு வைத்தியம் செய்யும் வைத்தியசாலைகளும், ஸர்க்கார்விவகாரச் சாலைகளும், துறைமுகப் பட்டணங்களில் ஆங்காங்குக்கட்டப்பட்டிருக்கிற கலங்கரை விளக்கங்களும் (Light-house). இந்த இலாகாக்காரரால் அமைக்கப்பட்டனவாம். சென்னை ஹைகோர்ட்டு முதலிய பெரிய கட்டடங்களைப் பாதுகாப்பதற்கு இந்த இலாகாக்காரர் செய்கிற வேலை ஆச்சரியகரமானது.

வாராவதிகள்—நமது தேசத்தில் அநேக நதிகள் இருக்கின்றன. அவை பெரும்பாலும் மேற்கில் உற்பத்தியாகிக் கிழக்கு முகமாக ஓடிச் சமுத்திரத்தில் விழுகின்றன. ஆகையால், கன்னியாகுமரி முனையிலிருந்து வடக்கே கங்கா நதி வரையில் செல்லவேண்டுமானால் அநேக நதிகளைத் தாண்டவேண்டும். பிரயாணிகள் செல்வதற்கும், புகை வண்டிகள் ஓடுவதற்கும், வர்த்தகம் விருத்தியாவதற்கும் இரும்பினாலும் கற்களினாலும் வாராவதிகளைக் கட்டி யிருக்கின்றனர். கங்கை, சிந்து, கோதாவரி முதலிய நதிகளின்மீது கட்டப்பட் டிருக்கும் நீண்ட வாராவதிகள் அதிக ஆச்சரியகரமானவை. இவற்றிற்காக நமது துரைத்தனத்தார் ஏராளமான பணத்தைச் செலவு செய்திருக்கின்றனர்.

கால்வாய்கள் — விவசாயத் தொழில் செய்பவர்களுக்கு அனுகூலமாக நீர் பாய்ச்சு.

வதற்கு வேண்டிய கால்வாய்களை வெட்டி யிருக்கின்றனர். கோதாவரி கால்வாய் சுமார் 2,400 மைல் நீளம் உள்ளது. கிருஷ்ணு நதி கால்வாய் சுமார் 2,000 மைல் நீளமுடையது. காவேரியின் கால்வாயும் 2,000 மைல் நீளம். இக் கால்வாய்கள் இலக்ஷக்கணக்கான ஏகராக்க ளுக்கு நீர் பாய்ச்சுகின்றன. இவ்விதமான கால் வாய்கள் இன்னும் அநேகம் உண்டு. இவை யன்றி, வர்த்தக விஷயமாகப் படகுகள் செல் லத்தக்க கால்வாய்களும் உண்டு. இவைகளில் பக்கிங்ஹாம் கால்வாய் ஒன்று. இந்தச் செலவு களுக்காக நீர்வரி விதித்து, அதனை நிலவரி யோடு சேர்த்து வசூல் செய்கிறுர்கள்.

சாலைகள் — முற்காலத்தில் ஓர் ஊரிலிரு ந்து மற்ருேர் ஊருக்குப் போகவேண்டுமானுல் பெரும்பாலும் காடுகளின் வழியாகச் செல்ல வேண்டும். பிரயாணிகளைத் திருடர் கொள்ளை யடிப்பதுண்டு. துஷ்ட மிருகங்களின் பயம் அதிகம். இப்போது நல்ல சாலைகளை அமை த்து, இருபுறமும் மரங்களை வரிசையாக வைத் திருக்கிறுர்கள். ஆங்காங்குப் பல புண்ணிய சீலர்கள் கட்டிய சத்திரம் சாவடிகளும் சுமை தாங்கிகளும் உண்டு. ஆகையால் பிரயாணிகள் யாதொரு அபாயமுமில்லாமல் பிரயாணஞ்செய் யக்கூடும். நமது மாகாணத்தில் ஏறக்குறைய 30,000மைல் நீளமுள்ளசாலைகள் இருக்கின்றன.

**அணைக் கட்டுகள்** — நீர்ப் பாய்ச்சலுக்கு அனுகூலமாக நமது துரைத்தனத்தார் ஆறுகளின் குறுக்கே அணைகளைக்கட்டி, ஜலத்தைத் திருப்பியிருக்கிறார்கள். இதனால் மேட்டு நிலங்களுக்கும் ஜலம் பாயக் கூடியதா யிருக்கிறது. நமது மாகாணத்தில் **பெரியாறு** என்று ஒரு நதி இருக்கிறது. இது திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் பாய்ந்து, மேற்குச் சமுத்திரத்தில் விழுந்துகொண்டிருந்தது. இதன் ஜலம் வீணுகப் போகாதபடி 170 அடி உயர முள்ள ஓர் அணையைக்கட்டி, ஜலத்தைத்திருப்பி, மதுரை ஜில்லாவுக்கு நீர் பாய்ச்சுகிறார்கள். இப்படியே கோதாவரி, கிருஷ்ணு நதிகளிலும் அணைகள் கட்டப்பட் டிருக்கின்றன. இவ்விதமான காரியங்களைச் செய்வதற்குத் துரைத்தனத்தார் ஓர் இலாகாவை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த இலாகா முன்னே சொன்ன மூன்று மந்திரிகளில் ஒருவரின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டு இருக்கிறது. சிற்பசாஸ்திரத்தில் நல்ல பயிற்சி வாய்ந்த பல எஞ்சினீர்கள் இதனில் நியமிக்கப் பட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் இவ்விதமான ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. மாகாணத்து எஞ்சினீர்களெல்லாருக்கும் தலைவர் சீப் எஞ்சினீர் எனப்படுவர். இந்த இலாகாவைத் துரைத்தனக் கட்டட இலாகா (P. W. D.) என்று சொல்வதுண்டு.

## 14. ரெயில்வே இலாகா

ஆங்கிலேயர் நமது தேசத்திற்குச் செய் திருக்கும் பெரிய நன்மைகளில் இருப்புப்பாதை ஒன்ருகும். முற்காலத்தில் நமது தேசத்தில் பிர யாணஞ் செய்வது வெகு கஷ்டமா யிருந்தது. ஓர் ஊரிலிருந்து வேமுேர் ஊருக்குப் போகப் பல நாட்கள் செல்லும். காசி யாத்திரை செய்ப வர்கள் அங்குப்போய்வர ஆறுமாதம் செல்லும். இப்பொழுது ஒரே வாரத்தில் போய் வரலாம்.



சென்னை - தென் மஹாராஷ்ட்ர ரெயில்வே

புகை வண்டிகள் நிலத்திலே பதிக்கப்பட் டுள்ள தண்டவாளத்தின்மீது ஓடுகின்றன. இந் தத் தண்டவாளங்களைப் பதிப்பதற்கும், வண்டி களை அமைப்பதற்கும் ஏராளமான பொருள் வேண்டும். ஒரு மைல் தூரம் இருப்புப்பாதை

போடுவதற்குச் சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் வரையில் பிடிக்கும். இவ்வளவு தொகை செலவு செய்வதற்கு நமது தேசத்தவர்களுக்குப் பணம் இல்லை. ஆகையால், நமது துரைத்தனத்தார் இங்கிலாந்தி லுள்ள பிரபுக்களையும், வர்த்தகர்



தென் இந்தியா ரெயில்வே

களையுங் கொண்டு இருப்புப் பாதைகளைப் போடும்படி செய்திருக்கிறார்கள். அவர்கள் வேறு வேறு சங்கங்களாகச் சேர்ந்து வேறு வேறு இடங்களில் இந்தியாவில் இருப்புப்பாதைகளைப் போட்டிருக்கிறார்கள். அதற்காக அச் சங்கத்தாருக்கு நிலங்களை நமது துரைத்தனத்தார் கிரயத்திற்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

இவ் வியாபாரத்தில் முதலாளிகள் இடும் பணத்துக்குக் குறைந்த பக்ஷம் இவ்வளவு வட்டி கிட்டவேண்டுமென்னும் நியமம் உண்டு.

வட்டி அதற்குக் குறைவுபடுமானல், அந்தக் குறைவை இந்தியத் துரைத்தனத்தார் நிறைவாக்கிக் கொடுக்க உடன்பட் டிருக்கிருர்கள். முதலாளிகளான ஆங்கில வர்த்தக சங்கத்தார் பணம்போட்டு இருப்புப்பாதைகள் அமைத்து, வண்டிகளைச் செய்து, அவைகளை இத்தனை வருஷங்கள் நடத்துவோமென்று குத்தகையாக ஒப்புக்கொண் டிருக்கிருர்கள். அந்தக் குத்தகைக் காலத்துக்குப் பின் இருப்புப் பாதைகளையும், வண்டிகளையும் இந்தியத் துரைத்தனத்தாரே கிரயத்திற்கு வாங்கிக் கொள்வதாக ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இவ்வித ஏற்பாட்டிற்கு உத்தரவாத முறை என்று பெயர். இப்பொழுது அந்த ஏற்பாட்டின்படி சில இருப்புப் பாதைகளைத் துரைத்தனத்தார் தாங்களே வாங்கிக்கொண்டிருக்கிருர்கள். சில இருப்புப்பாதைகளை டிஸ்ட்ரிக்ட் போர்டார் தங்கள் செலவில் போட்டு நடத்திவருகிருர்கள். சில இந்திய அரசர்கள் தங்கள் ஸமஸ்தானங்களில் தாங்களே இருப்புப்பாதைகளை அமைத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆகையால், துரைத்தனத்தாருக்கும், இருப்புப்பாதைகளுக்கும் சம்பந்த முண்டு.

கம்பெனியார் இருப்புப்பாதையின் சம்பந்தமாக எந்தக் கட்டடங்களைக் கட்டினலும் அம்மாகாணத்து ஸர்க்கார் என்ஜினீரிங் இலாகா உத்தியோகஸ்தரின் மூலமாக ஸர்க்காருடைய

அனுமதியைப் பெறல் வேண்டும். மேலும் 1905 - ஆம் வருஷம் முதல் இருப்புப்பாதை விஷயங்களுக்கு விசாரணைக் கர்த்தர்களாக மூவர் அடங்கிய ஒரு சபையை ஏற்படுத்தி யிருக்கின்றனர். அதற்கு ரெயில்வே போர்டு என்று பெயர். இந்தச் சபையார் இந்திய இருப்புப் பாதைகளின் வரவு செலவுக் கணக்குகளை ஆராய்ந்து துரைத்தனத்தாருக்கு ஆலோசனை சொல்லவும், இருப்புப் பாதைகளை அமைக்கவும், அவ்வப்போது நேரிடும் தகராறுகளைத் தீர்க்கவும், அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

இருப்புப் பாதைகளை அமைத்து நடத்துவதால் விசேஷ வரும்படி யுண்டு. பிரயாணிகளின் சாமான்களையும் வியாபாரச் சரக்குகளையும் ஏற்றிச் செல்வதனால் வசூலாகும் தொகையானது பிரயாணிகளிடத்தி லிருந்து வசூலாகும் தொகையைவிட மிகவும் அதிகம்.

## 15. வைத்தியமும் சுகாதார இலாகாவும் ஆரோக்கிய விசாரணையும்

இந்நாளில் நமது தேசம் பலவகையான கொள்ளை நோய்களுக்கு இருப்பிடமாகி விட்டது. அந்த நோய்களினால் வருஷந்தோறும் இலக்ஷக் கணக்கான ஜனங்கள் நமது தேசத்தில் மடிகிறார்கள். இவ்விதமாக ஜனங்கள்

இறந்து போகாதபடி துரைத்தனத்தார் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைத்திய சாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவைகளில் வைத்தியம் இனமாகச் செய்யப்பட்டு வருகின்றது.



ஜெனரல் ஆசுபத்திரி

இவ் வைத்திய சாலைகள் பலவகைப்படும். (1) தர்ம வைத்தியசாலை: அங்கு வியாதிகள் சொஸ்தமாகும் வரையில் நோயாளிகளை வைத்துப் பராமரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். (2) டிஸ்பென்ஸரிகள் இவ்விடத்தில் பிரதிதினமும் குறித்தவேளையில் நோயாளிகளைப் பார்வையிட்டுத் தகுந்த மருந்து கொடுத்து, வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்.

ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கும் தனித்தனி வைத்திய சாலைகள் ஏற்படுத்தப்பட்

டிருக்கின்றன. பிரசவிக்கும் ஸ்திரீகளைப் பராமரிப்பதற்காக மருத்துவ வைத்தியசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கண்ணுக்குரியநோய்களுக்குக் கண்ணாசுபத்திரியும், க்ஷயரோகத்திற்காக க்ஷயரோக வைத்தியசாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பைத்தியம் பிடித்தவர்களுக்காகப் பைத்தியக்காரர் ஆசுபத்திரி ஒவ்வொரு மாகாணத்தின் தலைநகரிலும் உண்டு. இவையன்றிப் பைத்தியம் பிடித்த நாய் முதலியவற்றின் கடிகளுக்கு வைத்தியம் செய்ய, வட இந்தியாவில் காசாவியிலும், தென்னிந்தியாவில் நீலகிரியைச் சேர்ந்த கூனூரிலும் ஆசுபத்திரிகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த வைத்தியத்திற்காகச் செல்லும் ஏழைகளுக்குத் துரைத்தனத்தார் வழிச் செலவும் கொடுக்கின்றனர்.

இந்தியாவிலுள்ள பலவகையான வைத்திய சாலைகள் சுமார், 3,000 வரையில் இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. அவைகளுள் சில ஆசுபத்திரிகளைப் பாதிரிமாரும், தனவான்களும் தங்கள் பேரால் கட்டி, அவைகளுக்கு மூலதனமும் வைத்து நடத்திவருகின்றனர்.

ஒவ்வொரு மகாணத்திலும் வைத்திய விஷயங்களுக்கு மேலதிகாரியாக இருப்பவருக்கு ஸர்ஜன் - ஜெனரல் (Surgeon - General) என்று பெயர். அவருக்குக் கீழ் ஒவ்வொரு

ஜில்லாவிலும் ஒரு பெரிய வைத்தியர் உண்டு. அவருக்கு டிஸ்ட்ரிக்ட் மேடிகல் அண்டு ஸானிடரி ஆபீஸர் (District Medical and Sanitary Officer) என்று பெயர். ஜில்லா முழுவதிலும் வைத்திய விஷயங்களுக்கும், ஆரோக்கிய விசாரணைக்கும் அவரே உத்தரவாதி. அவருக்கு உதவியாகப் பல வைத்தியர்களுண்டு. தாலூகா போர்டாராலும், முனிஸிபாலிடியாராலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வைத்தியசாலைகளின் அதிகாரிகளுக்கு அஸிஸ்டன்ட் - ஸர்ஜன் என்றும், ஸப் - அஸிஸ்டன்ட் - ஸர்ஜன் என்றும் பெயர். மருந்து கலந்து கொடுக்கக் கம்பவுண்டர்களையும் நியமித்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீஸருடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள்.

சுகாதாரமான விஷயங்களைக் கவனித்துப் பிரஜைகளுடைய க்ஷேமத்திற்கு வேண்டியவற்றைச் செய்வதற்காக ஆரோக்கியானுகூலசபை (Sanitary Board) என்று ஒரு சபையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தச் சபையில் ஸர்ஜன் - ஜெனரலும் ஒருவராவார்.

இவ்விதமாக நமது துரைத்தனத்தார் பிரஜைகளின் சௌக்கியத்திற்காகப் பலவிதமான வைத்திய சாலைகளை ஏற்படுத்தி ஏராளமான பணத்தைச் செலவு செய்கின்றனர்.

## 16. இராணுவ இலாகா

இந்தியாவானது முக்கோண வடிவமான பெரிய தேசம். இதன் இயற்கை யமைப்பு மிகவும் விசேஷமானது. இது மூன்று பக்கங்களில் சமுத்திரத்தாலும், ஒரு பக்கத்தில் பிரம்மாண்டமான இமயமலைத் தொடராலும் சூழப்பட்டிருக்கின்றது. இது அநேக வளங்கள் பொருந்திய சிறந்த தேசமென்று உலகமெங்கும் புகழ் பெற்றது. இதனை ஆங்கிலத்தவர் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட சிறந்த தேசமாக மதிக்கிறார்கள்.

முற்காலத்தில் இந்தியாவின் செல்வத்தைக் கவர்ந்துசெல்ல மகம்மதியர்கள் படையெடுத்து இமய மலையிலுள்ள கணவாய்களின் வழியாக வந்தார்கள். இன்னும் பலர் கடல் மார்க்கமாயும் இந்தியாவிற்கு வந்தார்கள். இவ்வித அபாயங்கள் இந்தியாவிற்கு நேரிடாதபடி ஆங்கிலத் துரைத்தனத்தார் பலமான சேனைகளை ஏற்படுத்திப் பாதுகாத்து வருகின்றனர். இவர்களுடைய பெரிய சேனைகள் தரைச் சேனை, கடற் சேனை, ஆகாயச் சேனை என்று மூன்று வகைப்படும்.

தரைச் சேனையில் ஆங்கிலேயரும், இந்தியரும் போர் வீரர்களாக அமர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது நமது தேசத்தில் சுமார் 75,000 ஆங்கிலப் போர் வீரரும், 1,50,000 இந்தியப் போர் வீரரும் இருக்கிறார்கள். சேனையில் இத்



ராஜபுத்ர வீரர்



கூர்க்கர்



பர்ட்வுட் பிரபு
கம்மாண்டர் - இன் - சீப்



சீக்கியர்



பட்டாணியர்

தனை பேர் ஆங்கில வீரர் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்து, அத்தனை ஆட்களை இங்கிலாந்திலிருந்து வருவிக்கிறார்கள்.

நமது தேசத்திலுள்ளவர்களை ஜாதி, மதம் முதலிய பேதமின்றிச் சிப்பாய்களாக எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால், பட்டாணியர், கூர்க்கர், சீக்கியர், இராஜபுத்ரர் முதலிய பற்பல ஜாதியாரை இச் சேனையில் காணலாம். இக் காரணத்தினால் நமது அரசருடைய சேனை மிகவும் பலமுள்ளதாயிருக்கிறது. காலாட்களும், குதிரை வீரர்களும், பீரங்கிப் பட்டாளங்களும் உண்டு. சேனையைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அந்த அதிகாரிக்குக் கம்மாண்டர் என்று பெயர்.

இந்தச் சேனை முழுவதும் இந்தியா கவர்ன்மெண்டாரின் மேற்பார்வையில் இருக்கிறது. ஆயினும், இந்தியாவிலுள்ள சேனைகளுக்குத் தலைவர் ஒருவர் உண்டு. அவருக்குக் கம்மாண்டர் - இன் - சீப் (Commander-in-chief) என்று பெயர். அவர் இராஜப்பிரதிநிதியின் ஆலோசனைச் சங்கத்து அங்கத்தினர்களில் ஒருவர்.

இந்தச் சேனையன்றி, இந்தியாவில் பற்பல உத்தியோகஞ் செய்யும் ஐரோப்பியர்கள், ஆபத்துக் காலத்தில் இராஜாங்கத்திற்கு உதவிசெய்ய

யுத்தப் பயிற்சியடைந்து சித்தமாயிருக்கிறார்கள். இவ்விதமாய் ஏற்பட்ட பட்டாளங்களுக்கு வாலண்டியர் கோர் என்று பெயர்.

நமது தேசத்து இந்திய சிற்றரசர்களிடத்திலும் சேனைகள் உண்டு. அவைகளைத் துரைத்தனத்தார் நன்றாகப் போர்முறையில் பழக்கி வைத்திருக்கின்றனர். இத்தகைய யுத்த வீரர்



பீரங்கிப் படை

க்ளில் சுமார் லக்ஷம் பேர் உண்டு. ஆபத்துக் காலங்களில் துரைத்தனத்தாருக்கு இந்திய சிற்றரசர்கள் தங்களிடத்திலுள்ள சேனைகளை அனுப்புவதாக ஒத்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு வேண்டிய வாள், ஈட்டி, துப்பாக்கி, குண்டுமுதலிய யுத்த உபகரணங்களை ஆங்கிலத் துரைத்தனத்தார் ஏராளமாகச் சேகரித்துவைத்

திருக்கின்றனர். இன்னும் அதிகமாக முஸ்தீப்புக்கள்வேண்டியிருந்தால் இங்கிலாந்திலிருந்து இரண்டு வாரத்தில் வரவழைத்து விடுவார்கள். ஆங்கிலேயருடைய தரைப் படையின் பலம் இவ் வகைகளினால் நிகரற்றதா யிருக்கிறது.

சேனைகளின்செலவுக்காக இராஜாங்கத்தார் அபரிமிதமான பணத்தைச் செலவு செய்கிறார்களென்றும் சேனைகளை வைத்திருப்பது வீண் என்றும் சிலர் அபிப்பிராயப்படுவது உண்டு. சேனைகளால் தேசக் காவல் ஏற்படாவிட்டால் பகைவர் படை யெடுத்து வந்து பிரஜைகளுக்குத் துன்பம் விளைத்து இந்த நாட்டைக் கைப்பற்றிக் கொள்வதில் சந்தேகமில்லை. உள் நாட்டில் கலகங்கள் உண்டாகும். தேசத்தில் சமாதானமும் அமைதியும் நிலைத்திரா. ஆகையால், சேனைகள் இருக்க வேண்டுவது அவசியமே. சேனைகளின் பொருட்டு வருஷவாரிச் செலவு செய்யவேண்டியதும் அவசியமே. அவசியம் இல்லாமல் எந்தத் துரைத்தனத்தாரும் அளவற்ற சேனைகளை வைத்து வீண் செலவு செய்யமாட்டார்களென்பதை நாம் உணரவேண்டும்; அதற்காகச் செலவாகும் பணம் முழுவதும் நமது தேசக் காவலுக்கும், நமது சொந்த நலத்திற்குமாகவே என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

## 17. கடற் படை

ஆங்கிலத்தவர் தங்கள் ஏகாதிபத்தியத்துக்குள்ளடங்கிய நாடுகளைக் காப்பதற்காகத் தரைச் சேனையுடன் கடற்படையையும் வைத்திருக்கின்றனர். அவர்களுடைய கப்பற்படை உலகத்திலுள்ள மற்றஎல்லாக் கப்பற்படைகளையும் விடச் சிறந்தது. அவர்களுக்குப் பூமியின் எல்லாப்



சண்டைக் கப்பல்

பக்கங்களிலும் ராஜ்யங்களுண்டு. இக்காரணத்தினால் ஆங்கிலேயருடைய ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிக்கிறதில்லை என்று சொல்வதுண்டு. ஆங்கிலேயர் யுத்தத்திற்கென்று பிரத்தியேகமாகக் கப்பல்களை அமைத்து, அவற்றில்சேனு வீரரையும் பீரங்கிகளையும் வைத்திருக்கின்றனர். அப்படிப்பட்ட கப்பலுக்குச் சண்டைக் கப்பல் (Man-of-war) என்று பெயர். அந்தக் கப்பல்கள்

வெகு விரைவாகச் செல்லக்கூடியவை. ஆங்கிலேயருடைய இவ்வகையான சண்டைக் கப்பல்கள் சமுத்திரங்களின் நாலு பக்கங்களிலும் ஓடிக்கொண் டிருக்கின்றன. நமது இந்தியாவைச் சுற்றிப் பல கப்பல்கள் ஓடிக்கொண்டும் காவல் செய்துகொண்டும் இருக்கின்றன.

இக் கப்பல்கள் 250 முதல் 350 அடி வரையில் நீளமும், 60 முதல் 75 அடி வரையில் அகலமும் உள்ளவை. இவை சுமார் 15,000 டன் பாரத்தைத்தாங்கக் கூடியவை. ஒரு சண்டைக்கப்பலைச் செய்வதற்குச் சுமார் 2 கோடி ரூபாய் செலவாகும். அப்படிப் பட்ட அற்புதமான கப்பல்கள் அநேகம் ஆங்கிலேயரிடத்தில் உண்டு. அவைகளுள் கடலில் மூழ்கி ஜலத்திற்குள் செல்லும் சப் - மரின் என்பது ஒரு வகைக் கப்பல். அதிலும் பீரங்கிகள் உண்டு. ஆகையால், எந்த ஜாதியாரும் சமுத்திரத்தில் ஆங்கிலேயரோடு எதிர்த்து நின்று யுத்தஞ் செய்து ஜயிப்பது அசாத்தியம்.



சப் - மரின்

கப்பற் சேனையின் பலமே இங்கிலாந்தின் பலத்திற்குக் காரணம். அதற்காக அவர்கள் வருஷவாரி அநேக கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். தரைச்சேனையும், கடற்சேனையும்



ஜப்ளின்

அன்றி ஆகாயச் சேனையும் உண்டு. அவற்றில் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஆகாய மார்க்கமாகச் செல்வதற்கும், யுத்த காலங்களில்



ஏரோப்பிளேன்

தபால் முதலியவைகளைத் தாமதமின்றிச் சேர்ப்பதற்கும் ஆகாயக் கப்பல்கள் என்னும் ஜப்ளின், ஏரோப்பிளேன் முதலியவைகளையும் காப்பாக வைத்திருக்கின்றனர்.

## 18. போலீஸ் இலாகா

ஒரு கிராமத்திலுள்ள ஜனங்கள் ஒருவருக் கொருவர் உபயோக முள்ளவர்களாக இருக்க வேண்டுமானல் அமைதியும் சமாதானமும் வேண்டும். அவை இல்லாவிட்டால் கிராமத் தில் குழப்பம் உண்டாகும். வர்த்தகம் கைத் தொழில் முதலியவை விருத்தி யடையமாட்டா. ஆகையால், ஜனங்களுடைய க்ஷேமம் குறைந் துவிடக் கூடும். பிரஜைகளுக்கு அவ்விதமான குறைவு நேரிடாதபடி காக்க வேண்டியது துரைத்தனத்தார் கடமை. தேசத்தில் அமைதி யுண்டாக்கவும், பலவிதமான குற்றங்களைத் தடுக் கவும், ஆங்காங்கே போலீஸாரை ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

ஜனவிருத்திக்கு ஏற்றபடி பலவகையான திருடு, மோசம், சூது, கொலை, சண்டை சச்சரவுகள் அதிகப்பட்டு வருகின்றன. இவை களைத் தடுப்பது போலீஸாருடைய கடமை யாகும். தெருக்களிலும், ஜனங்கள் கூடுமிடங் களிலும், பெரிய உற்சவ காலங்களிலும் ஸர்க் கார் உடுப்புத் தரித்துக்கொண்டு நின்று குற் றங்கள் நடவாமல் காவல் செய்யும் போலீஸ் காரரை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவர்களை ஊர்க்காவலர் என்றும், சேவகர் என்றும் இரு வகையாகச் சொல்வதுண்டு. வீதியில் அசுத்த

மானகாரியம் செய்வோரையும், வண்டிகளை அளவுக்கு மிஞ்சி மிக வேகமாக ஓட்டுவோரையும், சண்டை யிடுவோரையும் இவர்கள் பிடித்துத் தண்டனை செய்விப்பார்கள். வழி தெரியாமல் தடுமாறும் குழந்தைகளை இவர்கள் பெற்றோரிடத்தில் சேர்ப்பார்கள். வீடுகளில் தீப் பற்றினாலும், யாராவது குளம் குட்டைகளில் விழுந்து விட்டாலும், உடனே அவ்விடத்திற்குப் போய் இவர்கள் வேண்டிய உதவியைச் செய்வார்கள்; பணம் நகை முதலிய சொத்துக்கள் திருட்டுப் போய்விட்டால் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, திருடனைத் தண்டனைக் குட்படுத்தவும் முயற்சி செய்வார்கள். இராக் காலங்களில் ஊரைச் சுற்றிவந்து, திருடர்கள் ஜனங்களை உபத்திரவம் செய்யாமல் காப்பார்கள். இவர்களுக்குச் சம்பளம் சொற்பமானாலும் இவர்கள் நமக்குச் செய்யும் நன்மைகள் பல. இவர்களுக்குக் கத்தி, துப்பாக்கி, தடி முதலியவைகளை ஸர்க்காரார் கொடுத்து, அவற்றை உபயோகிக்கவும் கற்றுக்கொடுத் திருக்கிறார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும், தாலூகாவிலும், ஜில்லாவிலும், பட்டணத்திலும் போலீஸ் ஸ்டேஷன் என்கிற தாணா உண்டு. விஸ்தீர்ணத்திற்கும் ஜனத்தொகைக்கும் தக்கபடி போலீசுவீரரை அங்கங்கேவைத்திருக்கிறார்கள். அவர்கள் மேலதிகாரிக்குச் சப்-இன்ஸ்பெக்ட

என்று பெயர். அவருக்கு மேலே ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். ஒவ்வொரு தாணு வும், ஒரு ஸப்-இன்ஸ்பெக்டரின் அதிகாரத்தி லிருக்கிறது. தாலூகாக்கள் ஸர்க்கிள் இன்ஸ் பெக்டரின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. அவ ருக்கு மேல் அஸிஸ்டெண்ட் ஸூபரின்டெண் டெண்ட் அல்லது டெபுடி ஸூபரின்டெண் டெண்டுகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு மேலதிகாரியாக இருப்பவருக்குச் ஸூபரின் டெண்டெண்ட் என்று பெயர். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ஸூபரின்டெண் டெண்டு உண்டு. இவர்கள் அனைவருக்கும் மேல் அதிகாரியா யிருப்பவருக்கு இன்ஸ்பெக்டர்-ஜெனரால் ஆவ் போலீஸ் என்று பெயர். இவர் நேரே கவர்னர் அவர்களுடைய மேற்பார்வைக் குட்பட்டவர். பட்டணங்களி லுள்ள போலீ ஸாக்கு மேலதிகாரியாக இருப்பவருக்குக் கமி ஷனர் ஆவ் போலீஸ் என்று பெயர். இவரும் இன்ஸ்பெக்டர் - ஜெனரலுக்கு உட்பட்டவர்.

இவர்க ளல்லாமல், அதிக ஆட்களின் ஆவசியகம் நேரிடும்போது உபயோகிப்பதற் காகப் சேமப் போலீஸாும் (Reserve Police), இருப்புப்பாதைகளில் நடக்கும் குற்றங்களைத் தடுப்பதற்காக ரேயில்வே போலீஸ் படை யும் (Railway Police) உண்டு.

## 19. சிறைச்சாலைகள்

குற்றஞ் செய்தவர்களைப் போலீஸார் நியாயாதிபதியின் முன் நிறுத்தித் தண்டனை செய்விக்கின்றார்கள் என்று முன்னே சொன்னோம். நியாயாதிபதிகள் குற்றவாளிகளுக்கு அபராதம் போடுகிறார்கள். சிலரைச் சிறையி லடைக்கும்படி விதிக்கிறார்கள். சிறையி லடைக்கும்படியாகத் தீர்ப்புப் பெற்றவர்களுக்குக் கைதிகள் என்று பெயர். அவர்கள் ஓடித் தப்பிவிடாதபடி அடைத்து வைக்கும் இடங்களே சிறைச் சாலைகளாம். கைதிகளுக்காகப் பல விதமான சிறைச் சாலைகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன.

ஸப்-ஜெயில்: இது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அதிகாரமுடைய நியாயாதிபதியின் கோர்ட்டுக்குச் சமீபமாக இருக்கும். விசாரணையி லிருக்கும் குற்றவாளிகளையும் ஒரு மாத தண்டனைக்கு உட்பட்ட குற்றவாளிகளையும் இதில் அடைப்பார்கள்.

ஜில்லா ஜெயில்: இதில் ஒரு மாதத்திற்கு மேல் ஒரு வருஷம் வரையிலும் தண்டனை யடைந்த குற்றவாளிகளை அடைப்பார்கள். இப்படிப்பட்ட சிறைச்சாலைகள் ஏறக்குறைய எல்லா ஜில்லாக்களிலும் உண்டு.

ஸென்ட்ரல் ஜெயில்: இதில் ஒரு வருஷத்திற்குமேல் தண்டனை யடைந்தவர்களையும்,

தீவாந்தரவாசத் தீர்ப்புப் பெற்றவர்களையும் அடைத்து வைப்பார்கள். இவ் வகையான சிறைச்சாலைகள் வேலூர், சேலம், கண்ணனூர், கோயம்புத்தூர், திருச்சினப்பள்ளி முதலிய இடங்களில் உண்டு.



பெனிடென்ஷியரி (சென்னைச் சிறைச்சாலை)

ஸ்பேஷல் ஜெயில்கள் : இராஜாங்கத்திற்கு விரோதமான குற்றஞ் செய்தவர்களையும், பட்டணத்துக் குற்றவாளிகளையும், வாங்கின கடனைக் கொடுக்காது காவல்தண்டனை அடைந்தவர்களையும் இவற்றில் அடைப்பார்கள். சென்னபட்டணத்தி லுள்ள பெனிடேன்ஷியரி, ஸிவில் ஜெயில் முதலியவை இதிலடங்கும்.

இந்தச் சிறைச்சாலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைவர் உண்டு. அத் தலைவருக்குச்

சூபரின்டேண்டேண்டு என்று பெயர். அவருக்குக் கீழே ஜெயிலர்களும், வார்டர்களும் உண்டு இவர்கள் கைதிகள் ஓடிப்போகாதபடி ஜாக்கிரதையாகக் காக்கிறார்கள். கைதிகளுடைய தேகசௌக்கியம், உணவு, உடை முதலிய விஷயங்களையும் இவர்களே கவனிக்கிறார்கள்.

கைதிகள் ஒவ்வொருவரும் சிறைச்சாலையில் வேலை செய்யவேண்டும். வெறுங் காவல் (Simple Imprisonment) விதிக்கப்பட்டவர்கள் மாத்திரம் வேலைசெய்ய வேண்டியதில்லை.

இச் சிறைச்சாலைகளில் தச்சுவேலை, கருமாரவேலை, நெசவுத் தொழில், அச்சடித்தல், எண்ணெ யிறக்குதல், ஜோடு சேணம் முதலியன செய்தல் முதலிய பலவகையான வேலைகள் கைதிகளால் செய்யப்படுகின்றன.

நமது இராஜாங்கத்தார் சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளைச் சீர்படுத்த முயற்சிசெய்து வருகிறார்கள். நமது மாகாணத்தில் விடுபட்ட கைதி சகாயசங்கம் (Discharged Prisoners' Aid Society) என்று ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கின்றது. சிறைச்சாலையி லிருந்து விடுதலை யடைந்து வெளியே போகும் கைதிகளுக்குப் பணம் உதவி செய்து அவர்களை ஏதாவது தொழிலில் அமர்த்தி நல்வழியை அடையச் செய்ய வேண்டுமென்பதே இச் சங்கத்தின் நோக்கம்.

குற்றஞ் செய்த சிறுவரைக் குற்றம் செய்வதே வழக்கமாயுள்ள குற்றவாளிகளோடு அடைப்பதனால் கெடுதி யுண்டாகும். ஆகையால், அவர்களுக்குத் திருத்தப் பாடசாலை (Reformatory School) ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனில் சிறுவர்களைக் கல்விபயிற்றி, அவர்களை நல்வழிப்படுத்த முயற்சி செய்கின்றனர். இப்படிப்பட்ட கல்விச்சாலை நம் மாகாணத்தில் செங்கற்பட்டில் இருக்கிறது. அங்கு அனுப்பப்படும் சிறுவர்களை 18 வயது வரையிலும் அங்கே வைத்திருந்து, பின்பு அவர்கள் பெற்றோரிடம் பிற்கால நன்னடக்கைக்கு ஜாமீன் பத்திரம் வாங்கிக் கொண்டு, விட்டு விடுவார்கள். மேற்கூறிய கல்விச் சாலையிலிருக்கும்போது அச் சிறுவர்களுக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்கிறார்கள். அத் தொழிலைக்கொண்டு அவர்கள் பிற்காலத்தில் ஜீவிக்கக் கூடும். இவ்விதமான சீர்திருத்தக் கல்விச் சாலை ஒவ்வொரு மாகாணத்திலும் உண்டு.

தீவாந்தர வாசதண்டனை பெற்ற கைதிகளை அந்தமான் தீவுக்கு அனுப்பி விடுகிறார்கள். அவர்கள் அங்கே விவசாயம் முதலிய தொழில்களை இஷ்டப்படி செய்யலாம். அதற்கு வேண்டிய வசதிகளை அங்கே அமைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அந்தத் தீவை விட்டு வெளியேறக் கூடாது.

## 20. கல்வி இலாகா

சகல ஜனங்களும் சிறிதளவாவது கல்வி கற்று, நேர்மையும் யோக்கியதையும் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பது துரைத்தனத்தாருடைய அபிப்பிராயம்; ஆகையால், ஒவ்வொரு கிராமத்திலும் சிறு பிள்ளைகள் எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவும் கற்றுக்கொள்வதற்குத் தகுந்த பாடசாலைகளை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவ்விதமான பாடசாலைகளுக்குப் **பால போத பாடசாலைகள்** (Elementary Schools) என்று பெயர். சிறுவர்கள் முதல் முதலிற் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களை இந்தப் பாடசாலைகளிற் கற்றுக்கொள்கிறார்கள். பால போத பாடசாலைகள் நான்கு வகையினவாகும் —

(1) ஸர்க்கார் பாடசாலைகள்: இவைகள் பெரும்பாலும்பெண்பாடசாலைகளாகவே இருக்கின்றன. நமது நாட்டில் பெண்கள் விசேஷமாகக் கல்வி கற்பதில்லை. ஆகையால், பெண்களின் கல்வியை இவ்வாறு ஆதரிக்கின்றனர்.

(2) போர்டு பாடசாலைகள்: இவைகளை ஸர்க்கார் பண உதவியைக்கொண்டு தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, முனிஸிபாலிடி முதலிய சங்கத்தார் நடத்தி வருகிறார்கள். இந்தப் பாடசாலைகளில் பிள்ளைகளிடத்தில் சம்பளம்

வாங்குவதில்லை. இவ்விதமான பாடசாலைகள் நமது மாகாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும், பட்டணத்திலும் உண்டு.

(3) தர்ம பாடசாலைகள்: இவைகளைப் பாதிரிமாரும், இந்திய தனவான்களும் நடத்தி வருகிறார்கள். இவைகளுள் சிலவற்றில் சம்பளம் வாங்காது கல்வி கற்பித்து, அன்ன வஸ்திரமும் கொடுக்கிறார்கள்.

(4) திண்ணைப் பள்ளிக்கூடங்கள்: இவற்றில் பெற்றோர்களுடைய சக்திக்கு ஏற்றபடி சொற்ப தொகையை வாங்கிக்கொண்டு கிராம உபாத்தியாயர்கள் கல்வி கற்பிக்கிறார்கள்.

மேற்கூறிய பாடசாலைகளில் விசேஷமாய்த் தேச பாஷை, இங்கிலீஷ், கணிதம், பூகோளம், தேச சரித்திரம் முதலியவைகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். போதிக்கும் முறையில் தேர்ந்த உபாத்தியாயரை அதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தாலூகா போர்டார் நடத்திவரும் பாடசாலைகளைக் கல்வி இலாகா அதிகாரிகள் பார்வையிட்டு வருகின்றனர்.

பாதிரிமாரும், மற்றவர்களும் நடத்திவரும் பாடசாலைகளுக்குத் துரைத்தனத்தார் பெரும்பாலும் திரவிய சகாயம் செய்கிறார்கள். அப்

படித் திரவிய சகாயம் பெறும் பள்ளிக்கூடங்கள் சர்க்கார் கல்வி யிலாகா விதிகளை (Educational Rules) அனுசரித்து நடக்கவேண்டும்.

மேலே உயர்தர படிப்புப் படிக்க விரும்புகிறவர்களுக்காகச் செகண்டரிப் பாடசாலைகளும், காலேஜு (கலாசாலை) களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. காலேஜுப் படிப்பு, கலைக்கல்வி



பிரெஸிடென்ஸி காலேஜ்

என்றும், தொழிற் கல்வி என்றும் இரண்டு வகைப்படும். கலைக் கல்விக்காகச் சர்க்காரும் பாதிரிமாரும், பிறரும் பல கலாசாலைகளை ஏற்படுத்தி யிருக்கின்றனர். சென்னைப் பிரெஸிடென்ஸி காலேஜ், மேரி யரசி கலாசாலை, பச்சையப்பன் கலாசாலை, கிறிஸ்தவக் கலாசாலை முதலியவை இவ்வகுப்பைச் சேர்ந்தவை.

பல தொழில்களைக் கற்றுக்கொடுப்பதற்காகக் கலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. வைத்தியம் கற்பிப்பதற்காக வைத்திய கலாசாலை (Medical College) யும், தேசச் சட்டங்களைக் கற்பிக்கச் சட்ட கலாசாலை (Law College) யும், சிற்ப சாஸ்திரம் கற்பிக்கச் சிற்ப கலாசாலை (Engineering College) யும், விவசாய விஷயம் கற்பிக்க விவசாய கலாசாலை (Agricultural College) யும் ஏற்பட்டிருக்கின்றன.



ஸெனெட் ஹவுஸ்

இந்தக் கலாசாலைகளில் படித்துப் பரீட்சைகளில் தேறினவர்களுக்கு யோக்கியதா பத்திரமும், பட்டமும் கொடுக்கச் சர்வகலாசாலை என்று ஒரு சபை இருக்கின்றது. இவ்விதமான சர்வகலாசாலை ஒவ்வொரு மாகாணத்திலும்

உண்டு. சென்னைச் சர்வகலாசாலையார் கூடும் மகா மண்டபத்திற்கு ஸெனேட் ஹவுஸ் (Senate House) என்று பெயர்.

வித்தியா விஷயங்களைக் கவனிப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் ஓர் அதிகாரி உண்டு. அவருக்கு டைரெக்டர் (Director) என்று பெயர். அவருக்குக் கீழே ஒவ்வொரு ஜில்லாவிலும் டிஸ்ட்ரிக்ட் எடுகேஷனல் ஆபீஸர் ஒருவரும், டெபுடி இன்ஸ்பெக்டர்களும் உண்டு. அவர்கள் பாடசாலைகள் கிரமமாக நடைபெறுகின்றனவோ என்றும், உபாத்திமார் சரியாகப் பாடஞ் சொல்லுகிறார்களோ என்றும் கவனிக்கிறார்கள். உபாத்தியாயருக்குப் போதனை முறையைக் கற்பிக்க ட்ரெயினிங் ஸ்கூல்களையும், சென்னை சைதாபேட்டையில் ஒரு கலாசாலையையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். அக் கலாசாலைக்கு டீசர்ஸ் காலேஜ் என்று பெயர். இன்னும் பள்ளிக்கூடங்களி லுள்ள குறைவுகளை அப்போதைக் கப்போது கவனித்து நிவர்த்தி செய்கிறார்கள்.

பெண் பாடசாலைகளைப் பராமரிப்பதற்கு ஸ்திரீகளை நியமித்திருக்கிறார்கள்.

## 21. தபாலும் தந்தியும்

ஆங்கிலத்தவர் நமக்குச் செய்திருக்கும் பெரிய நன்மைகளில் ஒன்று தபால், தந்தித் தபால் என்னும் இவைகளால் ஏற்பட்ட அனுகூலமாம். முற்காலத்தில் ஓர் ஊரி லிருந்து மற்றோர் ஊருக்குச் சமாசாரம் அனுப்ப வேண்டுமானால், மைலுக்கு இவ்வளவு என்று கூலி கொடுக்க வேண்டும். இதனால் கால தாமதமும் பணச் செலவும் ஏற்படும். இக் காலத்தில் எவ்வளவு தூரமானபோதிலும் ஓர் அணுவுக்கு மேற்படாத செலவிலே சமாசாரங்களை அதிக விரைவில் தெரிவிக்கலாம். சொற்ப சமாசாரத்தை இந்தியாவிற்குள் தெரிவிப்பதற்கு அரை யணா கார்டு போதுமானது. இரண்டணா செலவு செய்தால் இங்கிலாந்திற்குச் சமாசாரம் தெரிவிக்கலாம். இப்படிச் சமாசாரங்களைக் கடித மூலமாகத் தெரிந்துகொள்வதற்குத் தபால் ஆபீசுகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. அவைகளின் மூலமாய் ஓர் ஊரிலுள்ளவர்கள் மற்றோர் ஊரி லுள்ளவர்களோடு எளிதில் சம்பாஷிக்கக் கூடும்.

தபாற்கூலி விவரம் — உள் நாடுகளுக்குத் தபால் அனுப்ப வேண்டுமானால் அரையணா விலையுள்ள கார்டில் எழுதலாம். கடிதங்கள் எழுதினால், இரண்டரைத் தோலா எடைக்கு

மேற்படாத கடிதங்களுக்குத் தபாற்கூலி ஓரணா. இதற்கு மேற்படும் ஒவ்வொரு இரண்டரைத் தோலாவுக்கு அல்லது அதன் பாகத்திற்கு ஓர் அணா அதிகம். புஸ்தகக் கட்டுகள் (Book post) ஐந்து தோலா எடைக்கு, அல்லது அதன் பாகத்திற்கு அரை அணா. புஸ்தகங்கள், அச்சிட்ட காகிதங்கள், கையெழுத்துப் பிரதிகள் முதலியவைகள் இவ்விதமான குறைந்த தபாற் கூலிக்கு அனுப்பப்படும். தபால் கூலியை முன்னதாகச் செலுத்தாது அனுப்பப்படும் கடிதங்களுக்கும், புத்தகக் கட்டுகளுக்கும் இரட்டைத் தபாற்கூலி வசூல் செய்யப்படும்.

தபால்களை அல்லது புஸ்தகக் கட்டுகளை அதிக ஜாக்கிரதையாக அனுப்ப வேண்டுமானால், அவைகளை ரெஜிஸ்தர் செய்து அனுப்ப வேண்டும். அதற்காக இரண்டணா கட்டணம் விதித்திருக்கிறார்கள். அதைத் தபாற் கூலியுடன் செலுத்தினால் ரெஜிஸ்தர் செய்து அனுப்புவார்கள்.

இவையன்றிப் பணம், நகை, அதிக பளுவில்லாத சாமான்கள் முதலியவற்றையும் தபால் வழியாக அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவைகளை ரெஜிஸ்தர் செய்து இன்சூர் செய்ய வேண்டும். 100 ரூபாய் மதிப்பிற்கு மேற்படாதவைகளுக்கு இன்சூர் சார்ஜ் 2 அணா. அதற்கு

மேல் ஒவ்வொரு அதிக 100-க்கும் அதன் பாகத்திற்கும் 2 அணு. ஓர் அணு முதல் அறுநூறு ரூபாய்வரையில் **மணியார்டர்** செய்தனுப்பலாம். இதற்குக்கட்டணம் 10 ரூபாய்க்கு 2 அணு, 25 க்கு 4 அணு. அதற்குமேல் ஒவ்வொரு பத்துக்கும் 2 அணுவாகும். இவ்விதமாக நாம் சமாசாரங்களைத் தெரிந்துகொள்வது மாத்திரமல்லாமல் தபால் வழியாக வர்த்தகத்தையும் விருத்தி செய்துகொள்ள அனுகூலம் உண்டு.

தபால் கார்டுகள், தபால் தலைகள், உறைகள் முதலியவற்றை அங்கங்கே விற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். குறித்த பிரகாரம் தலைகளை ஒட்டி, அல்லது, உறைகளில் போட்டுக் கடிதங்களைத் தபால் ஆபீசிலுள்ள பெட்டிகளிலாவது, வீதியோரங்களில் வைத்திருக்கும் தூண்களிலாவது போட்டு விட்டால், அவற்றைத் தபால் இலாகா வேலைக்காரர் எடுத்து ரெயில்வண்டி மூலமாக அனுப்பிவிடுகிருர்கள்.

ஒவ்வொரு சிறு கிராமத்திலும், பட்டணங்களின் ஒவ்வொரு முக்கியமான பாகத்திலும் தபால் ஆபீசுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தபால்ஆபீசுத்தலைவருக்குப்போஸ்ட்மாஸ்டர் என்று பெயர். பெரிய ஆபீசுகளில் அவருக்கு உதவியாகப் பலரை நியமித்து இருக்கிருர்கள். சென்னை நகரில் உள்ள பெரிய ஆபீசுக்கு

ஜெனரல்போஸ்டாபீஸ் என்று பெயர். அந்த ஆபீசுக்குத் தலைவர் பிரசிடென்ஸி போஸ்ட் மாஸ்டர். இந்த இலாகாவின் தலைமை அதிகாரிக்குப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் என்று பெயர். இவருக்குக் கீழே பல சூபரின்டெண்டெண்டுகள் உண்டு. ஒவ்வொரு தபால் ஆபீ



சென்னை ஜெனரல் போஸ்டாபீஸ்

ஸையும் நேரில் போய்ச் சோதனை செய்யவும், போஸ்ட் மாஸ்டர்களை மேற்பார்வை யிடவும், இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

தந்தித்தபால் — சமாசாரங்களைத் தபாலைக் காட்டிலும் அதிக விரைவில் அனுப்புவதற்குத் தந்தி வெகு சாதகமா யிருக்கிறது சமா

சாரங்கள் மின்சாரக் கம்பி|வழியே அனுப்பப் படுகின்றன. ஓர் ஊரி லிருந்து மற்றோர் ஊருக்குச் சமாசாரம் தெரிவிக்க வேண்டு மானால், அந்த இரண்டு ஊர்களி னிடையில் தூண்களை நிறுத்தி, அவற்றில் செப்புக் கம்பி களைக் கட்டி மின்சாரம் ஓடும்படி ஏற்பாடு செய் வார்கள். இரண்டு ஊரிலும் ஆபீஸ் உண்டு. இப்போது தந்திகள் உலகமெங்கும் விஸ்தார மாக ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இங்கி லாந்தில் நடக்கும் சமாசாரத்தையும் நாம் 24 மணி நேரத்தில் தெரிந்துகொள்ளலாம்.

நமது தேசத்தில் 1855-ஆம் வருஷம் தந்தி போட ஆரம்பித்தார்கள். இப்பொழுது சுமார் 70,000 மைல் நீளமுள்ள தந்திகள் போடப்பட்டிருக்கின்றன. அவசரமாக அனுப் பப்படும் (Express) தந்திக்கு விலாச முள்பட 12 வார்த்தைகளுக்கு ரூபாய் 1-8-0 கூலியாகும். அதிக வார்த்தை ஒவ்வொன்றுக்கும் 2 அணா கொடுக்க வேண்டும். மெதுவாக அனுப்பும் (Ordinary) சாதாரண தந்தித் தபாலுக்கு 12 அணா; ஒவ்வொரு அதிக வார்த்தைக்கும் ஓர் அணா கூலியாகும்.

## 22. பத்திரப் பதிவு இலாகா

முன் சொல்லிய அரசிறை இலாகாவில் முத்திரைக் கடிதங்களை விற்றுத் துரைத்தனத்தார் வருமானம் அடைகின்றனர் என்று சொன்னோம். கோர்ட்டுகளில் நாம் வியாச்சியம் செய்யும்போதும், வீட்டுச் சாசனம், அடைமானப் பத்திரம் முதலிய தஸ்தவேஜுகளை எழுதும் போதும் பொருளின் மதிப்புக்குத் தக்கபடி முத்திரைக் கடிதங்களை வாங்கி, அவற்றில் எல்லா விவரங்களையும் எழுதுகிறோம். அந்தப் பத்திரங்கள் கெட்டுப் போனால், திரும்பி நமக்குக் கிடைக்காது. மேலும், அவற்றில் திருத்தங்கள் செய்து ஜனங்கள் ஒருவரையொருவர் மோசம் செய்யவுங்கூடும். ஆகையால் அவற்றைத் தடுப்பதற்காகப் பத்திரப் பதிவு இலாகா என்று ஓர் இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இலாகாவின் தலைமை அதிகாரிக்கு இன்ஸ்பெக்டர் - ஜெனரல் ஆவ் ரேஜிஸ்டிரேஷன் (Inspector - General of Registration) என்று பெயர். இவருக்கு உதவியாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ரேஜிஸ்டிரார் (District Registrar) உண்டு. தாலூகாக்களிலும், பட்டணங்களின் பல பாகங்களிலும் ஸப் - ரேஜிஸ்டிரார் என்னும் உத்தியோகஸ்தரை வைத்திருக்கிறார்கள். ஜனங்கள் பத்திரத்தை அவர்களிடத்திற் கொண்டு போய், அவற்றில் எழுதப்பட்ட

பிரகாரம் துரைத்தனத்தாருடைய பதிவுப் புத்தகங்களில் பதிந்துகொள்ளும்படி செய்கிருர்கள். இதற்காக ஜனங்கள் கட்டணங்களைச் செலுத்தவேண்டும். கட்டணம் பத்திரத்தில் கண்ட தொகைக்குத் தக்கதாக இருக்கும்.

பத்திரம் ரெஜிஸ்தர் செய்யப்பட்ட பின்பு எந்தக் காலத்திலாவது அது காணுமற்போனுல், உடனே ரெஜிஸ்டிரார் ஆபீசிலிருந்து அதற்கு நாம் நகல் வாங்கிக்கொள்ளலாம். ஆனுல், புத்தகத்தில் அப் பத்திரம் எங்கே பதிந்திருக்கிறதென்று தேடவேண்டும். அதற்காக முதல் வருஷத்திற்கு ஒரு ரூபாய் பிரதி ஒவ்வொரு வருஷத்திற்கு 4 அணு வீதம் கூலி கொடுக்கவேண்டும்.

## 23. நாணயங்களும் நோட்டுகளும்

நமக்கு ஒரு பொருள் வேண்டுமானுல் அதற்கென்று குறிக்கப்பட்ட விலையைக் கொடுத்து அதைக்கடையிலாவது பிறரிடத்திலாவது வாங்கிக்கொள்கிருேம். முற்காலத்தில்எதாவது பொருள் வேண்டியவர்கள் அதற்குப் பதிலாக வேருெரு பொருளைக் கொடுத்து வாங்கிக்கொள்வது வழக்கமாயிருந்தது. இந்த வழக்கத்திற்குப் பண்டமாற்று என்று பெயர்.

இப்பொழுது நாம் பண்டங்களுக்குப் பதிலாக வெள்ளைச் செம்பு, செம்பு, வெள்ளி, பொன் இவைகளாற் செய்யப்பட்ட வில்லைகளைக் கொடுத்து, அவற்றை வாங்கிக்கொள்கிறோம். இந்த வில்லைகளுக்கு நாணயங்கள் என்று பெயர். வர்த்தகத்தைத் தாமதமின்றி



ஒரு ரூபாய்



8 அணா



4 அணா



இரண்டு அணா



ஓர் அணா



கால் அணா



பை

யும், சுகமாயும் நடத்துவதற்கு இவை நல்ல சாதனங்களாம். ஆகையால், வியாபாரத்தை விருத்தி செய்வதற்கே பலவகையான நாணயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

நமது தேசத்தில் வழங்கிவரும் நாணயங்கள் ரூபாய், எட்டணா, நாலணா, இரண்

டணு, ஓரணு, அரையணு, காலணு, பை என்பனவாம். சீமையி லிருந்து வரும் தங்கப் பவுனும் இங்கு வழங்கிவருகிறது.

இவற்றில் ஒரு ரூபாய், அரை ரூபாய் வெள்ளியினுலும், நாலணுவும் இரண்டணுவும் ஓரணுவும் வெள்ளைச்செம்பினுலும், அரையணு, காலணு, பை ஆகியவை செம்பினுலும் செய்யப்படுகின்றன. இவற்றைச் செய்யும் தொழிற்சாலைக்கு நாணயச்சாலை என்று பெயர்.

நாணயங்கள் சாதாரணமாய் உருவத்தில் வட்டமாயும், பார்வைக்கு வெகு அழகாயும் இருக்கும். ஒவ்வொரு வகையான நாணயமும் ஒரே எடையும், பரிமாணமும் உடையதாம். இரண்டணு மாத்திரம் சதுர வடிவம். அதன் ஒரு பக்கத்தில் சக்கரவர்த்தியின் உருவமும், மறு பக்கத்தில் நாணயத்தின் மதிப்பும், அச்சு அடித்த வருஷமும் குறித்திருக்கும்.

தங்கப் பவுன் 15 ரூபாய் விலை யுள்ளது என்று இராஜாங்கத்தார் ஏற்பாடு செய்தார்கள். தங்கப் பவுனைத் தவிர மற்ற நாணயங்களைச் செய்வதற்குப் பம்பாயிலும், கல்கத்தாவிலும் நாணயச்சாலைகளை ஏற்படுத்தி யிருக்கிருர்கள்.

**கரென்ஸி நோட்டுகள்** (Currency Notes). நாணயங்களை ஓர் இடத்தி லிருந்து மற்ருேர் இடத்திற்கு அனுப்புவது கஷ்டமாகையால்,

துரைத்தனத்தார் நோட்டுகளை அச்சிட்டு, அவைகளை நாணயமாய் உபயோகிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவைகளுக்கு வரிசைக்




10 ரூபாய் நோட்

கிரமமாக நம்பரும் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது 5,10,50,100,500,1.000,10,000 ரூபாய் மதிப்புள்ள நோட்டுகள் வழங்குகின்றன.

## 24. விவசாயம்

நமது தேசத்தி லுள்ளவர்களுக்கு முக்கியமான தொழில் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிடுதலாம். இதற்கு விவசாயம் என்று பெயர். இந்தியா இயற்கை யமைப்பால் விவசாய ஜீவனத்திற்குத் தகுதியான தேசம். மலைகளிலிருந்து

பெரிய ஆறுகள் உற்பத்தியாகிப் பிரவகித்து ஓடு கின்றன. பூமி பெரும்பாலும் செழிப்பானது. ஆறுகளைத்தவிர நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய ஏரிகள், குளங்கள் ஏராளமாக உண்டு. இந்தத் தேசத்திலுள்ள ஜனங்களின் உணவுக்கு வேண் டிய தானிய வகைகள் இங்கே பயிரிட வேண் டியனவாயிருக்கின்றன. ஆகையால், குடிகளில் பலர் விவசாயத் தொழிலையே செய்கின்றனர்.

நமது துரைத்தனத்தாருக்கு விவசாயத் தால்வரும் வருமானம் மிகவும் அதிகம். ஆகை யால், அவர்கள் விவசாயத்திற்கு அநுகூலமாக அநேக சாதனங்களைச் செய்திருக்கிறார்கள். ஆறுகள், ஏரிகளிலுள்ள ஜலம் வீணுகப்போகா மல் அணைக் கட்டுகளைக் கட்டியிருக்கிறார்கள். அவற்றி லிருந்து பல கால்வாய்களை வெட்டி அவற்றின் மூலமாக ஜலம் தாராளமாகப்பாயும் படி செய்திருக்கிறார்கள். ஜலம் அதிகமாக ஓடி வீணாய்ப் போகாமல் மதகுகளையும், கலிங்கல் களையும் ஆங்காங்கு அமைத்திருக்கின்றனர்.

விவசாயத் தொழிலைச் செய்ய நிர்வாக மற்றவர்கள் கலப்பை முதலிய கருவிகளையும், விதைத் தானியத்தையும், ஆடு மாடுகளையும் வாங்குவதற்கு வேண்டிய பணத்தைத் துரைத் தனத்தார் கடனாகக் கொடுத்து உதவி செய்கின் றனர். இதனால் ஏழையா யிருக்கும் குடியானவ

னும் பயிரிடும் தொழிலைச் செய்யக் கூடும். இவ் விதமாகக் குடிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு விவசாய சகாய நிதிகள் (Agricultural Banks) ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன.



கோயம்புத்தூர் விவசாயக் கலாசாலை

துரைத்தனத்தார் விவசாயத்தை விருத்தி செய்வதற் கேற்ற வழிகளையும் தேடிக்கொண் டிருக்கிறார்கள். அதைச் சாஸ்திர முறைப்படி கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். அதற்காக அவர்கள் கோயம்புத்தூரில் ஒரு விவசாயக் கலாசாலையை (Agricultural College) ஸ்தாபித்திருக்கிறார்கள்.

## 15. சாரணச் சிறுவர் இயக்கம்

நமது நாட்டில் இப்பொழுது சாரணச் சிறுவர் இயக்கம் என்னும் ஓர்இயக்கம் புதிதாய் உண்டாயிருக்கிறது. இதற்கு ஆங்கில பாஷையில் **ஸ்கவுட் மூவ்மெண்ட்** என்று பெயர். **ஸ்கவுட்** என்ற பதத்திற்குச் சாரணன் அல்லது வேவுகாரன் என்று அர்த்தம்.



ஸர் பேடன் பவல்

இந்த இயக்கத்தை ஸ்தாபித்தவர் **ஸர் பேடன் பவல்** என்னும் ஆங்கிலேயர். நல்ல தேக ஆரோக்கியமும், பலமும் உடைய பாடசாலைச் சிறுவரை ஒரு கூட்டமாகச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் எவ்விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்பதற்குச் சில விதிகளை ஏற்படுத்தி, அவற்றை அவர்கள் அனுசரித்து நடக்கும்படி செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே விதமான உடையை உடுக்கும்படி செய்கிறார்கள். யுத்த வீரருக்குப் போலவே அவர்களுக்கும் சில விதமான



சாரணச் சிறுவன்

கசரத்துகளைப் பயிற்றுவிக்கிறார்கள். அவர்களுக்கு நீண்ட மூங்கிற் கொம்பொன்று கொடுக்கப்படுகிறது. பொதுஜன நன்மைக்காக என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் பாடசாலையில் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆகையால், இந்த இயக்கம் இப்போது மிக்க மேலானதாகக் கருதப்படுகிறது. ஏறக்குறைய எல்லாப் பாடசாலைகளிலும் இப்போது **ஸ்கவுட்ஸ்** உண்டு. இந்த இயக்கம் அதிக உபயோகமுடையதாதலால் இராஜாங்கத்தாரும் இதை ஆதரித்து வருகின்றனர்.

உற்சவகாலங்களிலும், ஜனக்கூட்டமுள்ள இடங்களிலும் சென்று ஜனங்களில் யாருக்காவது ஆபத்து நேரிட்டதாகத் தெரிந்தால், உடனே அவர்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டியது ஸ்கவுட்டினுடைய கடமை. ஒருவன் குளத்திலாவது கிணற்றிலாவது விழுந்து விட்டால் ஸ்கவுட் அவனைத் தப்புவிக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டும். மூர்ச்சையடைந்தாலும், படுகாயம் பட்டாலும், முதல் முதலிற் செய்ய வேண்டிய (First Aid) உதவிகளைச் செய்து, அவன் பிழைக்கும் வகை தேடவேண்டும். பின்பு, அவனை வைத்தியசாலைக்குக் கொண்டுபோவதற்கு வகை செய்ய வேண்டும். வீடுகளில் தீப் பற்றிக்கொண்டால், அதை அவித்து வீட்டைக் காக்க முயல வேண்டும்.

ஜனங்களுக்கு என்னென்ன சகாயம் செய்யக்கூடுமோ அவற்றையெல்லாம் செய்யவேண்டும். ஸ்கவுட்ஸ் சாதாரணமாய்ப் போலீஸார் செய்யும் வேலைகளைச் செய்யலாம். ஆனால், திருட்டுப் புரட்டுகளைக் கண்டுபிடிப்பது அவர்கள் வேலையா யிருக்கப்படாது. சாரணர் இயக்கம் அதிக பிரயோஜன முடையதென்பது மேற்கூறியவைகளால் தெரியவருகிறது.

## 26. ஆங்கில அரசாட்சியில் நாம் அடைந்திருக்கும் நன்மைகள்

தேசத்தில் பிரயாணஞ் செய்வதற்கேற்ற வசதியான தெருக்கள் முற்காலத்திலில்லை. ஜனங்கள் காடுகளின் வழியாகப் பிரயாணஞ் செய்யவேண்டி யிருந்தது. அப்படிப் பிரயாணஞ் செய்யும்போது துஷ்ட மிருகங்கள் பிரயாணிகளைக் கொல்வதுண்டு. திருடர் பதிவிருந்து அவர்களைக் கொள்ளை யடிப்பார்கள். தக்கர் (Thugs) என்னும் கொலைபாதகர் அநேக பிரயாணிகளைக் கொன்றார்கள். ஆங்கிலேயர் இந்திய அரசாட்சியைக் கைக்கொண்டபின் இந்தியாமுற்றிலும் மாறுதலடைந்திருக்கிறது. அவர்களால் நாமடைந்திருக்கும் நன்மையைச் சுருக்கமாகச் சொல்லுவோம்.

**நமது தேசம் அமைதியும் சமாதானமும் உடையதா யிருக்கிறது**—சண்டை என்கிற பேச்சே நமது தேசத்தில் கிடையாது. ஆகை யால், பிரஜைகள் தத்தம் தொழில்களைத் தடை யின்றி, நடத்தக்கூடியவர்களா யிருக்கின்றனர்.

**பிரஜைகளுக்கு மத விஷயத்தில் பூரண சுவாதீன முண்டு**— நாம் நமக்கு இஷ்டமான மதத்தைக் கைக்கொள்ளலாம்.

**கெட்ட வழக்கங்கள் நீங்கின** — முற்கா லத்தில் கணவனை இழந்த மாது கணவனுடன் கட்டையேறித் தகனமாவது வழக்கம். மனித ரைத் தேவதைகளுக்குப் பலியிடுவது உண்டு. சிலர் பெண் சிசுக்களைக் கொல்வதுண்டு. ஆடு மாடுகளை விற்பதுபோல மனிதரை மனிதர் அடிமைகளாக விற்றுப் பணம் சம்பாதித் தார்கள். ஆங்கில அரசாட்சியில் இவையெல் லாம் ஒழிந்து போயின.

**நீதி சரியாய்ச் செலுத்தப்பட்டு வருகி றது** — தேசமெங்கும் கோர்ட்டுகளும் கச்சேரி களும் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. ஏழை யென்றும் தனவானென்றும் பேதமில்லாமல் இப்போது விவகாரங்களைச் சரியாக விசாரித் துத் தீர்மானஞ்செய்து வருகின்றனர். நன்றாய் விசாரணை செய்து குற்றவாளியென்று கண்டா லொழிய ஒருவரையும் தண்டிப்பதில்லை.

**கல்வி விருத்தியடைந்து வருகிறது**—கிராமங்களிலும் ஜில்லாக்களிலும் பற்பல பாடசாலைகளை ஏற்படுத்தி எல்லாருக்கும் கல்வி பயிற்றி வருகின்றனர். பால போத பாடசாலைகளில் இலவசமாகக் கல்வி கற்பிக்கப் படுகிறது. பெரிய பட்டணங்களில் கலாசாலைகளையும், சர்வகலாசாலைகளையும் ஸ்தாபித்து உயர்தரப் படிப்புக்கு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகையால், ஆங்கிலத்திலும், தேச பாஷைகளிலும் கல்விப் பயிற்சி அதிகமாக நடந்து வருகிறது.

**பிரயாண சௌகர்யம்** — முற்காலத்தில் பிரயாணஞ் செய்வது வெகு கஷ்டம். ஓர் ஊரிலிருந்து 100 மைல் தூரம் செல்ல வேண்டுமானால் பல நாட்கள் செல்லும். இப்பொழுது, அந்தப் பிரயாணத்தை இருப்புப் பாதைகளின் வழியாய் இரண்டு, மூன்று மணி நேரத்தில் முடிக்கலாம். தேசமெங்கும் ரெயில் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. சந்துகளிலும்கூட மோட்டார் வண்டிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

**தபால் தந்தி இவைகளால் ஏற்பட்ட சௌகர்யம்** — கடித மூலமாகவும், தந்தி மூலமாகவும் இப்பொழுது தூர தேசத்துச் சமாசாரங்களை அறியக் கூடும். முற்காலத்தில் இவ்விதமான சௌகர்யம் இல்லை. தபால் அனுப்ப

வேண்டுமானால், மைலுக்கு இவ்வளவென்று கூலி கொடுக்க வேண்டும். இப்பொழுது ஓர் அணுச் செலவில் இந்தியாவின் எந்த இடத்துச் சமாசாரங்களையும் தெரிந்துகொள்ளலாம்.

**தேசீய பாலனம்** — ஜில்லா சபை, தாலூகா சபை, கிராமப் பஞ்சாயத்து முதலிய பல சபைகளையும், நகர பரிபாலன சபைகளையும் உண்டாக்கி, நமக்கான விஷயங்களை ஒருவாறு நாமே தெரிந்து நடத்திக்கொள்ளத் துரைத்தனத்தார் நம்மைப் பழக்குகின்றனர். இவ்விதமாய் நம்மவர்கள் தேச பரிபாலன விஷயத்தில் நல்ல பயிற்சி அடைந்திருக்கிறார்கள்.

**பொது ஜன நலத்திற்குரிய வேலைகள்** — பல பெரிய கட்டடங்களையும், அணைக் கட்டுகளையும், பெரிய வாராவதிகளையும் கட்டுகின்றனர்; கால்வாய்களை வெட்டுகின்றனர். இவ்வித வேலைகளினால் அநேக ஏழை ஜனங்கள் ஜீவனஞ் செய்ய ஏதுவாகிறது. தேசத்திற்கும் அவை அதிக பலனைத் தருகின்றன.

ஆங்கிலத்தவரால் நாம் அடைந்திருக்கும் நன்மைகள் அநேகம். ஆதலால், நாம் அவர்களுடைய சட்டங்களுக்குக் கீழ்ப் படிந்து நடக்கவேண்டும். அவர்களிடத்தில் இராஜ விசுவாசம் பாராட்ட வேண்டும்.



## 27. ஆங்கில ஐக்கியக் கொடி

யூனியன் ஜாக் என்னும் ஆங்கிலக் கொடியில் இங்கிலந்து, ஸ்காத்லந்து, அயர்லந்து ஆகிய மூன்று வகுப்பினர்களின் சிலுவைக் குறிகளும் அடங்கியிருக்கின்றன. ஆதலால், இக் கொடிக்கு ஆங்கில ஐக்கியக் கொடி என்று பெயர்.

இந்தக் கொடி எந்தத் தேசத்தில் பறக்கிறதோ அந்தத் தேசம் ஆங்கிலேயருக்குச் சொந்தமானது என்று இது காட்டுகிறது. இந்தக் கொடியை நமது பள்ளிக்கூடங்களிலும், பொதுக் கட்டடங்களிலும் சக்கரவர்த்தி பிறந்த நாளிலும் முடிசூடின நாளிலும் இராஜ குடும்பத்திலும் இராஜாங்கத்திலும் சுப காரியங்கள் நடக்கும் நாட்களிலும் நாட்டுவது உண்டு. இக் கொடி பறக்கும் தேசமெங்கும் சகலவிதமான ஐசுவரியங்களும் தழைத்தோங்கக் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

## வாழ்த்துப் பாட்டு

('கல்லார்க்கும் கற்றவர்க்கும்' என்னும் மெட்டு)

1. உலமெங்கும் புகழ்பெருகும்
உத்தமனும் மன்னன்
உயர்குணங்க ளெல்லாந்திரண்
டோருருவா மன்னன்

2. அலகில்பல தேசங்களை
யாதரிக்கும் மன்னன்
அல்லலெலாந் தீர்த்துநல
மருளவரு மன்னன்

3. பலகலையுந் தன்னறிவாற்
பயின்றறிந்த மன்னன்
பயமனைத்தும் நீக்கிநம்மைப்
பாதுகாக்கும் மன்னன்

4. இலகுபல வேந்தர்களுக்
கிறையவனு மன்னன்
எங்கள்ஐந்தாம் ஜார்ஜுமன்னன்
இன்புடன்வா ழியவே.

கா. நமச்சிவாயன்.

Printed at the Aurora Press," Madras — 1930. (G)